தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.04.2013 A.M**

---

## பசுந்தாள் உர பயிர் விதைகள் மானியத்தில் விநியோகம்

பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் பசுந்தாள் உர பயிரான தக்கைப் பூண்டு விதைகள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதாக வேளாண் உதவி இயக்குநர் எஸ்.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

குறுவை நெல் பயிரிடவுள்ள விவசாயிகள் பசுந்தாள் உர பயிர் செய்து 25-ல் இருந்து 30 நாட்களில் மடக்கி உழுது பின்னர் நடவு செய்யலாம். இவ்வாறு செய்யும் போது மண்ணில் அங்ககச் சத்துக்கள், பேரூட்டச் சத்துகள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் அதிகமாகி பயிர்கள் செழித்து வளரும். பசுந்தாள் உரப்பயிர்கள் பயிர் செய்யப்பட்டு விளைவிக்கப்பட்ட நிலங்களில் நெற்பயிரில் விளைச்சல் அதிகரிப்பதோடு, அரிசியின் ருசியும் அதிகரிக்கிறது. வைக்கோலில் கூட தீவன ஊட்டம் அதிகமாகிறது.

சிதம்பரம் மற்றும் பரங்கிப்பேட்டை வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் பசுந்தாள் உர பயிர் விதைகள் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனச் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விவசாயிகள்குறைதீர்வு கூட்டம் 22-ம் தேதிக்கு மாற்றம்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கூட்டம் வரும் ஏப்ரல் 22-ம் தேதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டம் வெள்ளிக்கிழமை (ஏப்ரல் 19) காலை 10 மணிக்கு நடைபெறுவதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஏப்ரல் 22-ம் தேதி திங்கள்கிழமை மதியம் 3 மணிக்கு இக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த புகார்களை விவசாயிகள் தெரிவித்து பயனடையலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளை தொழில் முனைவோராக உயர்த்த பயிற்சி

விவசாயிகளை தொழில் முனைவோர் ஆக்குவதற்கான பயிற்சிக் கூட்டம், விழுப்புரத்தில் வியாழக்கிழமை நடை

பெற்றது.

தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் திட்டங்கள் குறித்த இப் பயிற்சிக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு ஆட்சித் தலைவர் வா.சம்பத் தலைமை வகித்தார்.

இப் பயிற்சி மத்திய சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975-ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் வேளாண் மற்றும் வேளாண் வணிக செயல் திட்டங்களை சிறு விவசாயிகளிடையே சென்றடையும் வகையில் முனைப்புடன் செயல்படுத்துவது, தொழில்நுட்ப பயிற்சியினை அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், விவசாயிகளின் கூட்டமைப்புகள் ஆகியோருடன் இணைந்து செயல்படுத்துவது, பொது, தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களை தேர்ந்தெடுத்து அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி பதனிடுதல் மற்றும் உற்பத்தி அலகுகளை மேம்படுத்துதல், உள்ளூர் விற்பனை மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்த ஆவன செய்தல், விவசாயிகளை ஒருங்கிணைத்து வேளாண் மற்றும் வேளான் சார்ந்த தொழில்களை முனைப்புடன் செயலாக்க ஊக்குவித்தல், விவசாயிகளுக்கு பொருளாதார வங்கி உதவியுடன் விவசாய தொழில் அபிவிருத்தி முயற்சி மேற்கொள்ளுதல், பயிற்சி பெற்ற விவசாயிகள் தொழில் முனைவோராக மாறுவதற்கு உதவி செய்யப்படுகிறது.

விவசாயிகள் தாங்கள் செய்யும் தொழில் குறித்து ரூ.75 லட்சத்துக்கு மிகாமல் திட்ட அறிக்கையை தயார் செய்து அனுப்ப வேண்டும். மலைவாழ், மலைசார்ந்த திட்டங்களுக்கு அந்தந்த மாநில அரசின் பரிந்துரையின் பேரில் மாநில முகவர்கள், மாநில சிறு விவசாயிகள், வேளாண் வணிக நட்பமைப்புகளால் பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களுக்கு கூடுதல் உதவி அளிக்கப்படுகிறது.

இத் திட்டத்தில் உதவி பெற விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில், தோட்டக்கலை, பூக்கள் அபிவிருத்தி கலை, மூலிகைகள், மணம் தரும் தாவரங்கள், சிறு காடுகளின் உற்பத்திகள், பட்டு பூச்சி வளர்த்தல், உரம் விவசாய வகைகள் மற்றும் மீன் துறை, கோழிப்பண்ணை மற்றும் பால்

பதப்படுத்தும் துறைகள் இடம் பெற்றுள்ளன. இத் திட்டத்தின் மூலம் விவசாயிகளை தொழில் முனைவோர்களாக ஆக்குதல், விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் நல்ல உயர்தர சாகுபடி செய்யவும், உதவி செய்யப்படுகிறது.

விவசாயிகள் தயார் செய்யும் தொழில் முனைவர் திட்டங்கள் வங்கிகளால் ஒப்புதல் தர ஏதுவாக இருக்க வேண்டும் போன்ற விவரங்கள் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டன.

இக் கூட்டத்தில் சிறு விவசாயிகளின் வேளாண் வணிக நட்பமைப்பு செயல் இயக்குநர் வி.சி.சாந்தி, வேளாண்மை நிதி நிறுவன திட்ட மேலாளர் சந்திரபிரகாஷ், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துணை இயக்குநர் ம.சண்முகம், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ராஜகணேஷ், முன்னோடி வங்கி பொது மேலாளர் பாலச்சந்திரன், நபார்டு வங்கியின் பொது மேலாளர் விக்ரமன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்த விவசாயிகள் முன்வர வேண்டும்: ஆட்சியர்

விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, சாகுபடி முறையை மாற்றியமைத்து, அதிக மகசூல் மற்றும் லாபம் பெற விவசாயிகள் முன்வர வேண்டும் என்று, மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தெரிவித்தார்.

தேனி அருகே வடபுதுபட்டி ஊராட்சிக்கு உள்பட்ட அம்மாபட்டியில் வியாழக்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவுக்கு தலைமை வகித்து அவர் பேசியது:

தமிழகத்தில் வேளாண்மை உற்பத்தி மற்றும் விவசாய வருமானத்தை அதிகரித்து பசுமை புரட்சி ஏற்படுத்த, அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. விவசாயத்தில் நவீன தொழில்நுட்பம் மற்றும் எந்திரங்களின் பயன்பாட்டை விவசாயிகள் தெரிந்து கொள்ளவேண்டும்.

விவசாயிகள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நோய்த் தாக்குதலில் இருந்து பயிர்களைப் பாதுகாக்கவும், அதிக மகசூல் மற்றும் லாபம் பெறுவதற்கு விவசாயிகள் முன்வர வேண்டும்.

நவீன தொழில்நுட்பத்துக்கு ஏற்ப சாகுபடி முறையை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். நீர் மற்றும் உரம் மேலாண்மை குறித்தும், விவசாயத்துக்கு அரசு வழங்கும் மானிய உதவிகள் குறித்தும் விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டும். இது குறித்து, விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், வழிகாட்டவும் கிராமந்தோறும் உழவர் பெருவிழா நடத்தப்படுகிறது என்றார்.

விழாவில், வேளாண்மைத் துறை சார்பில் விசாயிகளுக்கு நெல் சாகுபடி பயிர் கடன், சொட்டுநீர் பாசன மானியம், கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர்களுக்கு கைத் தெளிப்பான், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் தாது உப்புக் கலவை ஆகியவற்றை ஆட்சியர் வழங்கினார்.

தோட்டக்கலை, வேளாண்மை பொறியியல், கால்நடைப் பராமரிப்பு மற்றும் கூட்டுறவுத் துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியை ஆட்சியர் பார்வையிட்டார்.

பெரியகுளம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் செல்லமுத்து, வடபுதுப்பட்டி ஊராட்சித் தலைவர் ரேணுப்ரியா, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரம், துணை இயக்குநர் கோவிந்தராஜன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் வெள்ளியங்கிரி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் சந்திரசேகரன், தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநர் ராஜன், வேளாண்மைப் பொறியியல் துறை செயற்பொறியாளர் ராஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை)செ. முத்தையா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## ஆண்டிபட்டியில் சூறைக் காற்றால் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள வாழைகள் சேதம்

ஆண்டிபட்டி அருகே போடிதாசன்பட்டியில், கடந்த சில நாள்களாக வீசிய சூறைக் காற்றால் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள வாழை மரங்கள் ஒடிந்து விழுந்து சேதமடைந்தன.

ஆண்டிபட்டி பகுதியில், கடந்த சில நாள்களாக கோடை வெயில் வாட்டி வருகிறது. மேலும், மழை இல்லாததால் கிணறுகளின் நீர் மட்டமும் வெகுவாகக் குறைந்துள்ளது.

இந்நிலையில், சில நாள்களுக்கு முன் பெய்த மழையால் கோடை வெப்பம் சற்று தணிந்தது.

அதையடுத்து, கடந்த சில நாள்களாக பல்வேறு இடங்களில் சூறைக் காற்று வீசியது.

இதனால், ஆண்டிபட்டி சுற்றுப் பகுதியில் பல்வேறு இடங்களில் பல ஆயிரக்காணக்கான வாழை மரங்கள் ஒடிந்து விழுந்து சேதமடைந்தன.

இது குறித்து, போடிதாசன்பட்டியைச் சேர்ந்த விவசாயி வள்ளியம்மாள் கூறியது:

போடிதாசன்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 100 ஏக்கருக்கும் மேல் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சூறைக் காற்றால் பெரும்பாலான இடங்களில் வாழை மரங்கள் ஒடிந்து விழுந்து சேதமடைந்துள்ளன.

கடந்த சில மாதங்களாக மழை இல்லாததால், கிணற்று நீரை வைத்துதான் 3 ஏக்கர் பரப்பளவில் 3000 வாழை சாகுபடி செய்திருந்தேன். இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன் வீசிய சூறைக் காற்றால், குலை தள்ளிய நிலையில் காணப்பட்ட 1500- க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் சேதமடைந்தன.

எனவே, நிவாரணம் வழங்கக் கோரி ஆண்டிபட்டி வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேன் என்றார்.

## உழவர் பெருவிழாவில் 300 விவசாயிகள் பங்கேற்க ஏற்பாடு

தேனி மாவட்டத்தில் வருவாய் கிராமம் தோறும் நடைபெற்றுவரும் உழவர் பெருவிழாவில், ஒவ்வொரு கிராமத்திலும் 300 விவசாயிகள் வரை பங்கேற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் 113 கிராமங்களில் கடந்த ஏப்.14-ம் தேதி தொடங்கி வரும் மே.20-ம் தேதி வரை உழவர் பெருவிழா நடைபெறுகிறது. 2-ம் பசுமை புரட்சியை ஏற்படுத்தவும், அரசு திட்டங்களின் கீழ் விவசாயம் சார்ந்த துறைகளின் ஒத்துழைப்புடன் விவசாயிகள் பயனடையவும் இந்த விழா நடைபெறுகிறது.

விழாவில், வேளாண்மை, தோட்டக்கலை, விதைச் சான்று, விதை ஆய்வு, வேளாண்மை விற்பனை, வேளாண்மை பொறியியல், கால்நடைப் பராமரிப்பு, தோட்டக் கலைக் கல்லூரி, நீர்வள ஆதார அமைப்பு, பட்டு வளர்ச்சி, மீன் வளம், கூட்டுறவு ஆகிய துறைகள் சார்பிலும், பால் உற்பத்தியாளர் சங்கம், சர்க்கரை ஆலை நிர்வாகம் ஆகியவற்றின் சார்பிலும் திட்டச் செயல்பாடுகள் குறித்த விளக்கக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

விழா நடைபெறும் வருவாய் கிராமத்துக்கு உள்பட்ட பகுதிகளில் கண்காட்சி ஊர்தி மூலம் விழா குறித்து விளம்பரப்படுத்தப்படுகிறது. விவசாயிகளிடம் மண் மாதிரிகள் சேகரிக்கப்படுகிறது. மகசூலில் சாதனை படைத்த உள்ளூர் விவசாயிகளின் பட்டியல் கண்காட்சியில் இடம் பெறுகிறது. விவசாயத் திட்டங்களை விளக்கும் வகையில் கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது. ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் 250 முதல் 300 விவசாயிகள் வரை விழாவில் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விழாவில் கலந்துகொள்ளும் விவசாயிகளுக்கு அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. விவசாயிகள் உழவர் பெருவிழாவில் கலந்து கொண்டு புதிய தொழில்நுட்பங்கள் குறித்து அறிந்து கொண்டு பயனடையலாம்.

விழா நாட்கள்: வெள்ளிக்கிழமை (ஏப்.19) திம்மரசநாயக்கனூர், அனுமந்தன்பட்டி, ஓடைப்பட்டி, பெருமாள்கவுண்டன்பட்டி ஆகிய இடங்களிலும், ஏப்.20-ம் தேதி கொப்பையம்பட்டி, கண்டமனூர், டி.வாடிப்பட்டி, அல்லிநகரம், ராயப்பன்பட்டி, பூலானந்தபுரம், கூழையனூர் ஆகிய இடங்களிலும், ஏப்.22-ம் தேதி கன்னியப்பபிள்ளைபட்டி, எண்டப்புளி, ஊஞ்சாம்பட்டி, மேலக்கூடலூர், குண்டல்நாயக்கன்பட்டி ஆகிய இடங்கள், ஏப்.23-ம் தேதி உப்புத்துறை, எ.காமாட்சிபுரம், கோகிலாபுரம் ஆகிய இடங்கள், ஏப்.24-ம் தேதி ஏத்தக்கோவில், டி.கள்ளிப்பட்டி, சின்னமனூர், பத்திரகாளிபுரம் ஆகிய இடங்களிலும் உழவர் பெருவிழா நடைபெறுகிறது.

## வெங்காய விலை கடும் உயர்வு

வறட்சியால் வெங்காய விளைச்சல் குறைந்ததாலும் வெளிமாநிலங்களில் இருந்து வெங்காய வரத்து போதியளவில் இல்லாததாலும் ராஜபாளையம் சந்தையில் சின்ன வெங்காயம் விலை இருமடங்காக அதிகரித்துள்ளது.

திருநெல்லேலி மாவட்டத்தில் அதிகளவிலும், விருதுநகர் மாவட்டத்தில் பரவலாகவும் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த 6 மாதங்களாக போதிய மழை இல்லாததால் விளைச்சல் போதுமான அளவில் இல்லை. ஆந்திரம், மற்றும் கர்நாடக மாநிலங்களிலும் கடும் கோடை காரணமாக சின்ன வெங்காயவரத்து போதிய அளவில் இல்லை.

கடந்த சில வாரங்களுக்குமுன் ராஜபாளையம் உழவர் சந்தை, தினசரி காய்கனி சந்தையில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.25 க்கு விற்றது. தற்போது வரத்து குறைவால் கிலோ ரூ50 முதல் ரூ. 55 வரை விற்பனை செய்யப்படுகிறது.

## "விவசாயத்தை காப்பாற்ற வேண்டியது இளைஞர்களின் கடமை'

தற்போதைய சூழ்நிலையில் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் விவசாயத்தை காப்பாற்ற வேண்டியது இளைஞர்களின் முக்கிய கடமை என்று பசுமை கலாம் இயக்க நிறுவனரும், திரைப்பட நடிகருமான விவேக் கூறினார்.

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயா, பசுமை கலாம் இயக்கம், மேட்டுப்பாளையம் ரத யாத்திரை விழாக் குழு சார்பில் ரத யாத்திரை விழா மற்றும் மரம் நடுவிழா ஆகியவை மேட்டுப்பாளையம் கோ-ஆபரேடிவ் காலனியில் நடைபெற்றது. கோவை ஸ்ரீ விஜயலட்சுமி பொதுநல அறக்கட்டளை நிறுவனர் ஓ.ஆறுமுகசாமி தலைமை வகித்தார். காரமடை ஒன்றியக் குழு தலைவர் ராஜ்குமார், நகராட்சி துணைத் தலைவர் ரமாசெல்வி, ரத யாத்திரைக் குழு நிர்வாகி பாண்டுரங்கன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேட்டுப்பாளையம் நகர்மன்றத் தலைவர்

சதீஷ்குமார் வரவேற்றார். இதில் உலக சமுதாய சேவா சங்க கோவை மண்டல துணைத் தலைவர் ஆர்.வெள்ளிங்கிரி அறிமுக உரையையும், கோவை ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயா செயலர் சுவாமி அபிராமானந்த மகராஜ் அருளுரையையும் வழங்கினர்.

விழாவில் பசுமை கலாம் இயக்கம் சார்பில் மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியில் 10,000 மரக்கன்றுகள் நடும் திட்டத்தை துவக்கி வைத்து நடிகர் விவேக் பேசியது:

இந்தியாவின் ஆன்மிக வலிமையை முதன்முதலில் உலகிற்கு உணர்த்தியவர் சுவாமி விவேகானந்தர். நம்மிடம் உள்ள சக்தியை உணர்ந்தால் எதையும் சாதிக்க முடியும் என்பது அவரது வேதவாக்கு. மனித மனங்களின் இருளை அகற்றி அதில் ஆன்ம ஒளியை ஏற்றியவர் சுவாமி விவேகானந்தர்.

அவரது பொன்மொழிகள் அனைத்தும் இளைஞர்கள் மனதில் தன்னம்பிக்கையை வளர்த்து, உலகில் நல்ல மனிதராக வாழ்வதற்கு வழி காட்டக்கூடியவை. நாட்டின் வளர்ச்சிக்கு அவர் காட்டிய ஒரே அடையாளம் இளைஞர்கள்தான். அதை இன்றைய இளைஞர்களும் உணர்ந்து, நமது சமுதாய வளர்ச்சிக்கும், தேச வளர்ச்சிக்கும் தங்களால் இயன்ற பங்களிப்பை செலுத்த வேண்டும்.

நமது நாட்டின் வளர்ச்சிக்கு ஆணி வேராகவும், நாட்டின் 80 சதவீத மக்களின் உயிர் நாடியாகவும் உள்ள விவசாயம் இன்று அழிந்து வருகிறது. அதைக் காப்பாற்றி, உயிர்ப்பிக்க வேண்டியது இன்றைய இளைஞர்களின் கடமை. அதற்கு மரம் நடுதலே ஒரே தீர்வாகும்.

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அறிவுரையின்படி தொடங்கப்பட்ட பசுமை கலாம் இயக்கம் சார்பில் 1 கோடி மரங்கள் நடுவதை இலக்காக கொண்டு செயல்படுத்தி வருகிறோம். முதன் முதலில் கோவை சிறுதுளி அமைப்பின் மூலம் 1 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டன. இதுவரை 18.5 லட்சம் மரக்கன்றுகளை நட்டுள்ளோம் என்றார்.

விழாவில் பேரூராட்சித் தலைவர் ஆறுமுகசாமி, கவுன்சிலர் ராஜ்குமார், ஊராட்சி முன்னாள் தலைவர் சண்முகம், அரிமா முன்னாள் மாவட்ட தலைவர் நவரத்தன்மல், ரோட்டரி தலைவர் ஸ்டீபன், அனைத்து இந்து சமுதாய சங்கத் தலைவர் சி.பொன்னுசாமி, மர வியாபாரிகள் சங்க நிர்வாகி சுதர்சன், கோவை விஜயலட்சுமி அறக்கட்டளை மருத்துவ பிரிவு அமைப்பாளர் ஜோதிமணி, ஆலய பங்குத்தந்தை பால் சகாயராஜ் உள்பட மாணவர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## ஈரோட்டில் திடீர் மழை

ஈரோட்டில் வியாழக்கிழமை திடீரென மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக ஈரோடு மாவட்டத்தில் பகல் நேரத்தில் கடுமையான வெயில் இருந்து வருகிறது. பருவமழை பொய்த்துப் போனதால் காவிரி, பவானி ஆறுகள் வறண்டுபோயின.

இதனால், கீழ்பவானி, தடப்பள்ளி-அரக்கன்கோட்டை, காலிங்கராயன் பாசனப் பகுதிகளில் பயிர்கள் காய்ந்து வருகின்றன. இந் நிலையில், ஈரோட்டில் வியாழக்கிழமை மாலை 4.30 முதல் 5.30 மணி வரை பலத்த மழை பெய்தது. திடீர் மழை காரணமாக மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.08 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 42.08 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 150 கனஅடி நீர் வந்தது. ஆற்றில் 15 கனஅடி நீரும், வாய்க்காலில் 2 ஆயிரம் கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 2.80 டி.எம்.சி.

## அறுசுவை உணவுடன் உழவர் விழா!

தமிழக அரசின் 2-ஆவது பசுமைப் புரட்சியை முன்னிட்டு, தோட்டக்கலைத் துறை சார்பில் கோத்தகிரியில் உழவர் பெருவிழா நடைபெற்றது.

நடுஹட்டி வருவாய் கிராமத்துக்கு உள்பட்ட பையங்கி பகுதியில் புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்துக்கு ஊர் தலைவர் நடராஜன் தலைமை வகித்தார். கோத்தகிரி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் கா.ராஜேந்திரன் வரவேற்று, தோட்டக்கலை திட்டங்கள் குறித்து பேசினார்.

உதவி வேளாண்மை அலுவலர் பி.பி.ராமன், மாவட்டக் கண்காணிப்புப் பொறியாளர், உதகை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கால்நடைத் துறை, உபாசி, வேளாண்மை பொறியியல் துறை, விற்பனைத் துறை, விதைச் சான்றுத் துறை, ஆவின் ஆகிய துறைகளிலிருந்து அலுவலர்கள் கலந்துகொண்டு, தங்கள் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர்.

300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. உதவி வேளாண்மை அலுவலர் ஆர்.மணி நன்றி கூறினார்.

## உழவர் பெருவிழாவில்விவசாயிகளுக்கு உயிர் உரம்

போளூரை அடுத்த சோமந்தபுத்தூர் ஊராட்சியில் புதன்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு உயிர் உரம் வழங்கப்பட்டது.

விழாவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் மூர்த்தி முன்னிலை வகித்தார். துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணி, மானிய திட்டங்களை பற்றி விளக்கினார். போளூர் வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணகி சிறப்புரையாற்றினார்.

தோட்டக்கலைத் துறை, பட்டுத் துறை, பொறியியல் துறை அலுவலர்கள் விவசாயிகளுக்கு நவீன விவசாயம் குறித்து விளக்கினர். விழாவில், விவசாயிகளுக்கு உயிர் உர விதை நேர்த்தி குறித்த செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

## உழவர் பெருவிழாக்களில் பங்கேற்கவிவசாயிகளுக்கு வேளாண் துறை அழைப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை (ஏப்ரல் 19) நடைபெறும் உழவர் பெரு விழாக்களில், விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வேளாண் துறை இணை இயக்குநர் இர.சக்ரவர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவண்ணாமலை ஒன்றியம் மேல்செட்டிப்பட்டு, மஞ்சம்பூண்டி, விசுவந்தாங்கல், துரிஞ்சாபுரம் ஒன்றியம் ஊசாம்பாடி, சொரந்தை, கீழ்பென்னாத்தூர் ஒன்றியம் மானவரம், ராயம்பேட்டை, செங்கம் ஒன்றியம் உச்சிமலைக்குப்பம், விண்ணவனூர், தண்டராம்பட்டு ஒன்றியம் கீழ்சிறுப்பாக்கம், எடத்தனூர், புதுப்பாளையம் ஒன்றியம் நரசிங்கநல்லூர், மேலபுஞ்சை, போளூர் ஒன்றியம் நம்மியந்தல், குருவிமலை, ஓடமங்கலம் ஆகிய கிராமங்களில் வெள்ளிக்கிழமை (ஏப்ரல் 19) உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இதேபோல, கலசப்பாக்கம் ஒன்றியம் காலூர், பத்தியவாடி, சேத்துபட்டு ஒன்றியம் திருமலை, ராயங்குப்பம், ஆரணி ஒன்றியம் முருகமங்கலம், மேற்கு ஆரணி ஒன்றியம் முள்ளண்டிரம், வந்தவாசி ஒன்றியம் பாதிரி, சலுக்கை, தெள்ளாறு ஒன்றியம் சு.காட்டேரி, பழவேரி, பெரணமல்லூர் ஒன்றியம் மடம், இசாகொளத்தூர், செய்யாறு ஒன்றியம் வடுகப்பட்டு, வட தணஅடலம், அனக்காவூர் ஒன்றியம் எருமைவெட்டி, கீழ்கொளத்தூர், அனப்பத்தூர், வெம்பாக்கம் ஒன்றியம் கீழ்நாயக்கன்பாளையம், கிரிஜாபுரம், புன்னைதாங்கல் ஆகிய கிராமங்களில் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் உழவர் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இவ் விழாக்களில் அந்தந்த பகுதி விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம். உழவர் பெருவிழாக்களில் வைக்கப்படும் வேளாண் கண்காட்சியைப் பார்வையிட்டு பயன்பெறலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## அய்யம்பாளையத்தில் உழவர் பெருவிழா

திருவணணாமலையை அடுத்த அய்யம்பாளையம் கிராமத்தில் புதன்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது.

விழாவுக்கு, ஊராட்சி மன்றத் தலைவர் பாபு தலைமை வகித்தார். வேளாண் விதை உதவி அலுவலர் அரிபுத்திரன் வரவேற்றார். வேளாண் உதவி இயக்குநர் பெரியசாமி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பேசுகையில், தமிழக அரசு புதிதாக பெருநகர காய்கறி திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இத் திட்டத்தின்படி, ஒரு கிராமத்தில் 20 பேர் கொண்ட குழு அமைத்து நிலத்தில் காய்கறிகளை பயிரிட வேண்டும். இதற்காக அந்த குழுவுக்கு அரசு ரூ.1 லட்சம் வழங்குகிறது. இத் திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார். தொடர்ந்து, 4 விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்களை அவர் வழங்கினார்.

இவ்விழாவில், வேளாண்மை அலுவலர் சுந்தரமூர்த்தி, விவசாய விரிவாக்க உதவியாளர் சிவலிங்கம், உதவி வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன், தோட்டக்கலைத் துறை உதவி அலுவலர் கன்னியப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தருமபுரியில் மழை

தருமபுரி மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் வியாழக்கிழமை மழை பெய்ததால் வெப்பம் தணிந்தது.

தருமபுரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக வெயிலின் அளவு 100 டிகிரிக்கும் அதிகமாகப் பதிவானது. கோடை வெப்பத்தால் நோயாளிகள், முதியவர்கள், குழந்தைகள், பெண்கள் உள்ளிட்டோர் பெரும் சிரமத்துக்கு உள்ளாகினர்.

இந்த நிலையில், வியாழக்கிழமை பிற்பகல் தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி, காரிமங்கலம், பெரியாம்பட்டி, மாட்லாம்பட்டி, குண்டலஹள்ளி, நல்லம்பள்ளி, ஒகேனக்கல் உள்ளிட்ட பகுதிகளில் காற்றுடன் மழை பெய்தது. இதனால், சில இடங்களில் மரங்கள் சாய்ந்தன. சாலையோரங்களில் மழைநீர் தேங்கியது.

கழிவுநீர்க் கால்வாய்களில் அடைப்புகள் ஏற்பட்டு, சாலையில் கழிவுநீருடன் மழை நீரும் ஓடின. இதனால், சாலையில் நடந்து சென்ற பொதுமக்கள் சிரமத்துக்கு உள்ளாகினர்.

## குண்டல்மடுவு கிராமத்தில் உழவர் பெருவிழா

தருமபுரி மாவட்டம், குண்டல்மடுவு கிராமத்தில் வியாழக்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது.

பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், குண்டல்மடுவு கிராமத்தில் நடைபெற்ற இந்த விழாவுக்கு வேளாண் உதவி இயக்குநர் வி.மனோகரன் தலைமை வகித்தார். வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி என்.ஏ.சரவணன், நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமையின் செயல் அலுவலர் எம்.அசோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மண் மாதிரி எடுத்தலின் அவசியம், எலி ஒழிப்பு, பார்த்தீனியம் செடிகள் ஒழிப்பு ஆகியன குறித்து விவசாயிகளுக்கு கிராமியக் கலை நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், விவசாயிகளுக்கு இடுபொருள்களும் வழங்கப்பட்டன. முன்னோடி விவசாயிகள் தங்களது வயல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

### வேளாண் பொருள்கள் முக்கியத்துவம் குறித்த பேரண

வேளாண் பொருள்களின் முக்கியத்துவம் குறித்து விளக்கிட, ராசிபுரம் அருகேயுள்ள வெண்ணந்தூரில் வியாழக்கிழமை பேரணி நடைபெற்றது.

பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுவினர் சுமார் 300-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இந்தப் பேரணியை, வெண்ணந்தூர் ஒன்றியத் தலைவர் தமிழ்ச்செல்வி தொடக்கிவைத்தார்.

வெண்ணந்தூர் காமராஜர் சிலை முன் தொடங்கிய பேரணி நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று இறுதியாக வேளாண்மை அலுவலகத்தை அடைந்தது.

தமிழக முதல்வரின் உத்தரவுப்படி பாராம்பரியம் மிகுந்த வேளாண் பொருள்களான இளநீர், சீகைக்காய், பருத்திப் பொருள்களை உபயோகப்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள், அதனால், மேம்படும் விவசாயிகளின் வாழ்வதாரத்தை விளக்கிட இந்தப் பேரணி நடத்தப்பட்டது. பேரணியில் பங்கேற்றோர் வேளாண் பொருள்களின் உபயோகத்தை விளக்கும் பதாகைகளை கையில் ஏந்தியபடிச் சென்றனர்.

பேரணியின் தொடர்ச்சியாக வேளாண் அலுவலகத்தில் வேளாண் உற்பத்திப் பொருள்களின் முக்கியத்துவம் குறித்த கண்காட்சியும், கருத்தரங்கமும் நடைபெற்றது.

இதில் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் லோகநாத பிரகாசம், வெண்ணந்தூர் துணை வேளாண்மை அலுவலர் பசுபதி, தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தமிழ்செல்வி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 25.08 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 25.08 அடியாக இருந்தது.அணைக்கு வினாடிக்கு 126 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## கரும்பு டன்னுக்கு ரூ. 3,500 நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 3,500 நிவாரணம் வழங்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

திருவாரூரில் அண்மையில் நடைபெற்ற தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாவட்டக்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கரும்பு வெட்டுக் கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும். தடையில்லாமல் மும்முனை மின்சாரம் வழங்கி கரும்பு விவசாயத்தை பாதுகாக்க வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்க நிர்வாகி அக்பர்தீன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மாவட்ட செயலர் எஸ். தம்புசாமி, பொருளாளர் சி. ராஜதுரை, மாவட்டக்குழு உறுப்பினர்கள் ராஜசேகரன், மாதவன், அன்பரசன், சாரநாதன், குப்புசாமி, தியாகராஜன், இளங்கோவன் உள்ளி ட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.04.2013 A.M**

---

## ஆப்ரிக்க நாடுகளுக்கு இடம்பெயரும் ஓசூர் விவசாயிகள்:கொய்மலர் உற்பத்தியில் திருப்பம்



ஓசூர்:ஆப்ரிக்க நாடுகளில், குறைந்த விலைக்கு விவசாய நிலம் கிடைப்பதால், ஓசூர் மலர் பண்ணை விவசாயிகள், அங்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் பகுதியில் ஆண்டு முழுவதும், 5 ஆயிரம் ஹெக்டேரில் ரோஜா, ஜெர்பரா, கார்னேஷன், ஆஸ்டர் உள்ளிட்ட, 25 வகை கொய்மலர்கள் உற்பத்தியாகின்றன.குறிப்பாக, 5,000 ஏக்கரில், திறந்தவெளி மற்றும் உயர் தொழில்நுட்ப பசுமை கிடங்கு முறையில், விவசாயிகள், ரோஜா சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

**தொழில்நுட்பம்:**ஓசூர், பேரிகை, பாகலூர், பேளகொண்டப்பள்ளி, தளி, தேன்கனிக்கோட்டை மற்றும் கெலமங்கலம் பகுதியில், ஐம்பதுக்கும் மேற்பட்ட மலர் பண்ணைகளில், உயர் தொழில்நுட்பத்தில் உற்பத்தி யாகும் ரோஜா மலர்கள், ஐரோப்பா, அரேபியா மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.பருவ மழை குறைந்துள்ளதால் இந்த பகுதிகளில், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து உள்ளது. ஆழ்துளை கிணறுகள் வறண்டதால், ரோஜா செடிகளுக்கு, சொட்டு நீர் பாசனம் செய்ய முடியவில்லை. சர்வதேச சந்தையில், ஓசூர் ரோஜாவுக்கு வரவேற்பு குறைந்தது.

இந்நிலையில், எத்தியோப்பியா, கென்யா, கானா <உள்ளிட்ட, ஆப்ரிக்கா நாடுகளில், மலர்

சாகுபடிக்கு ஏற்ற சூழல், மிக குறைந்த விலைக்கு விவசாய நிலம், அதிகமான நீர் ஆதாரம், கட்டமைப்பு வசதி, குறைந்த ஊதியத்திற்கு கூலியாட்கள் கிடைப்பதால், அங்கு உலக தரம் வாய்ந்த ரோஜா மலர்களின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

**உற்பத்தி செலவு:**அந்நாடுகளில், ஒரு ரோஜா கொத்துக்கான உற்பத்தி செலவு, 1 ரூபாயில் அடங்கி விடுகிறது. அதனால், சர்வதேச சந்தையில், ஒரு ரோஜா, 5 ரூபாய்க்குவிற்றாலே, 4 ரூபாய் லாபம் கிடைக்கிறது. ஓசூர் பகுதியில், ஒரு ரோஜா கொத்துஉற்பத்தி செய்ய, 3 ரூபாய் முதல் 4 ரூபாய் வரை செலவாகிறது.

தற்போது ஓசூர் ரோஜா, 5 ரூபாய், 7 ரூபாய் வரை தான், விற்பனையாகிறது. இவற்றில் கிடைக்கும் லாபம் கூலியாட்கள், மின்சார கட்டணம், போக்குவரத்துக்கு செலவாகி விடுகிறது. அதனால், ஓசூர் மலர் பண்ணை விவசாயிகள், தற்போது ஆப்ரிக்கா நாடுகளில் மலர் பண்ணைகள் அமைத்து, ரோஜா சாகுபடி செய்யஆர்வமாகியுள்ளனர்.

ஓசூர் மலர் விவசாயிகள் கூறியதாவது;எத்தியோப்பியா, கென்யா, கானாஉள்ளிட்ட, ஆப்ரிக்கா நாடுகளில் ஒருஏக்கர் நிலம், 3,000 ஆயிரம் ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரை கிடைக்கிறது. அரசே, புறம்போக்கு நிலத்தை, 99 ஆண்டு,குத்தகைக்கு தருகிறது.

**மானிய உதவி:**மலர் சாகுபடிக்கு தேவையானகட்டமைப்பு வசதி, மானிய உதவிகளை,வங்கிகள் செய்து கொடுக்கின்றன.தோட்டங்களில் வேலை செய்ய, நாளொன்றுக்கு, 25 ரூபாய் முதல் 50 ரூபாய்க்கு கூலி வேலைக்கு ஆட்கள் கிடைக்கின்றனர்.அதனால், அந்நாடுகளில் பூக்கள் உற்பத்தி செலவு மிக குறைவு. அதனால், ஆப்ரிக்க நாடுகளில், ஓசூர் மலர் பண்ணை விவசாயிகள், விவசாய நிலங்களை விலைக்கு வாங்கி வருகின்றனர்.இவ்வாறு, அவர்கள் கூறினர்.

உலக மலர் உற்பத்தியில் இந்திய ரோஜா 2 சதவீதம்கடந்த காலத்தில் இந்தியாவில், கொய்மலர்கள் சாகுபடி அதிகளவு நடந்தது. பருவநிலை மாற்றம், உற்பத்தி செலவு அதிகரிப்பால், கொய்மலர்சாகுபடி குறைந்தது.கடந்த, 2006ம் ஆண்டு இந்தியாவில் இருந்து, 750 கோடி கொய்மலர்கள்ஏற்றுமதியாயின. கடந்த, 2011ம் ஆண்டு கொய்மலர்கள் ஏற்றுமதி, 286 கோடியாக வீழ்ச்சியடைந்தது. தற்போது, உலக ரோஜா ஏற்றுமதியில், இந்தியாவின் பங்களிப்பு, 2 சதவீதமாக உள்ளது. சீன ரோஜா வருகையால், இது மேலும் குறைய வாய்ப்புள்ளது.

ரோஜா விவசாயத்தை மேம்படுத்தவும், கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்காததால், ரோஜா சாகுபடியில், இழப்பு ஏற்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## வறட்சியால் சிறு தானியங்கள் விலை அதிகரிப்பு



தேனி:தமிழகத்தில் மழையின்மையால், சிறு தானியங்கள் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அதே சமயம், சிறு தானிய பயன்பாடும் உயர்ந்து வருகிறது. தேவைக்கேற்ப உற்பத்தி இல்லாததால், சிறு தானியங்கள் விலை உயர்ந்துள்ளது.தமிழகத்தில் மக்காச்சோளம், சோளம் அதிகமாகக் கிடைக்கிறது. கர்நாடகாவில் இருந்து, கேழ்வரகு மட்டும் வருகிறது. இதர சிறு தானியங்களின் வரத்து வெகுவாகக் குறைந்து விட்டது. எனவே, இவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

ஒரு கிலோ கம்பு 17 ரூபாய், சோளம் 16 ரூபாய்,மக்காச்சோளம் 15 ரூபாய், சாமை அரிசி 55 ரூபாய், கேழ்வரகு 26 ரூபாய், வரகு அரிசி 45 ரூபாய், குதிரைவாலி அரிசி 50 ரூபாய் என, விற்கப்படுகிறது.இதனால், இவற்றை பயன்படுத்தி தயாரிக்கப்படும் மாட்டுத் தீவனங்களின் விலையும் அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ டீலக்ஸ் பொன்னி 32 ரூபாய், பி.பி.டி., 38 ரூபாய், கர்நாடகா பொன்னி புதுசு 36 ரூபாய், பழசு 44 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.தேனி வியாபாரி சீனிவாசகன் கூறியதாவது: தமிழகம், கர்நாடகா, ஆந்திராவில் சிறு தானியங்கள் விளைச்சல் இல்லாததால், சந்தையில் போதுமான அளவு இருப்பு இல்லை. தற்போதுள்ள இருப்பு, அடுத்த சீசன் வரை போதுமானதாக இருக்காதுஎன்பதால், விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளது, என்றார்.

## விவசாயிகள் தற்கொலையை தடுக்க வழி இயற்கை விஞ்ஞானி யோசனை

தஞ்சாவூர்: ""இந்தியாவில், இறக்குமதி விதைகளை விதைக்காமல், பாரம்பரிய நெல்விதைகளை விதைத்து, பயிரிட்டால், விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலையை தடுக்க முடியும்," என, இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் கூறினார்.

தஞ்சை மருதுபாண்டியர் கல்லூரியில் கல்லூரி தின விழா நடந்தது. இதில், கல்லூரி தலைவர் பாரதிதாசன் தலைமை வகித்தார். செயலாளர் சுஜாதா முன்னிலை வகித்தார். முதல்வர்

ஞானதிரவியம், துணை முதல்வர் விஜயா முன்னிலை வகித்தனர். இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பேசியதாவது:

பூமி என்னும் ஒரே கப்பலில் தான் மனிதர்கள் யாவரும் பயணிக்கிறோம். பூமியை தவறாக கையாள்வதால், சுற்றுச்சூழல் மாசுபட்டு, சீரழிந்து விட்டது. இதை சீர்படுத்தி வருங்கால சந்ததிக்கு தூய்மையான பூமியை பரிசாக தருவதும், விட்டு செல்வதும் நமது கடமை. இதை அனைவரும் உணர வேண்டும். இயற்கை ஒருபோதும் மனிதர்களை வஞ்சிப்பதும் இல்லை. தவறிழைப்பதும் இல்லை. ஆனால், மனிதர்களாகிய நாம் தான் பலவகையிலும் தவறிழைக்கிறோம்.

பாரம்பரிய நெல்விதைகளை பயிரிட்டால் பூமி பாதுகாக்கப்படும்; விவசாயிகளும் பயன்பெறலாம். மாறாக, இறக்குமதி விதைகளை பயன்படுத்தினால், அது காய்ந்து கருகி, பயனில்லாமல் போகும் சமயத்தில் விளைச்சல் கிடைக்காமல் விவசாயி தற்கொலை செய்து கொள்ள நேரிடுகிறது.

விவசாயத்தில் தற்கொலை சாவுகளை தடுக்க பாரம்பரிய நெல் விதைகளை விதைக்க வேண்டும். இந்தியாவில் கடந்த ஐந்தாண்டுகளில் இரண்டு லட்சத்து, 50 ஆயிரம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இயற்கை உரங்களை இனியாவது பயன்படுத்த விவசாயிகள் விழிப்புணர்வு பெற வேண்டும். ரசாயன உரங்களை தூவும்போது, நிலம் பாழாகிறது.

வயல்களின் நடுப்பகுதியில் குட்டை வெட்டி சுற்றிலும் மா, பலா, வாழை என, பலவகை மரங்களை வளர்க்க வேண்டும். இதன்மூலம் விளைநிலம் பாழாவது தடுக்கப்பட்டு, வளம் பெற வழிவகை ஏற்படும். விவசாய பாடங்களை வேளாண்மை பல்கலைகளில் படிக்க கூடாது; மாறாக கிராமங்களிலுள்ள நிலங்களில் உழுது, விதைத்து, இயற்கையிடமிருந்து பாடம் கற்க வேண்டும்.

இவ்வாறு, அவர் பேசினார்.

துணை முதல்வர் தங்கராசு நன்றி கூறினார்.

## திராட்சை விலை அதிகரிப்பு

கம்பம்: மகாராஷ்டிரா திராட்சை வரத்து குறைந்துள்ளதால், கம்பம் பள்ளத்தாக்கு திராட்சைக்கு படிப்படியாக நல்ல விலை கிடைக்கத் துவங்கியுள்ளது. ஆண்டு முழுவதும் திராட்சை சாகுபடி செய்யும் பகுதியாக, கம்பம் பள்ளத்தாக்கு உள்ளது.ஏற்றுமதி ரக திராட்சையை மகாராஷ்டிரா மாநிலம் மட்டுமே சாகுபடி செய்கிறது. தேசிய திராட்சை ஆராய்ச்சி மையம் அங்கு அமைக்கப்பட்டுள்ளது.திராட்சை விலையை பொறுத்தவரை, விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கிடைப்பதில், தொடர்ந்து சிக்கல் உள்ளது.சபத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து திராட்சை பழம் அதிகளவு தமிழ்நாட்டிற்கு விற்பனைக்கு வந்தது. இதனால் இங்கு சாகுபடி

செய்யப்படும் திராட்சைக்கு விலை கிடைக்கவில்லை. கம்பம் திராட்சை கடந்த வாரம் வரை, கிலோ ரூ. 16 முதல் 18 வரை விற்றது.தற்போது மகாராஷ்டிராவில் இருந்து பழம் வருவது குறைந்துள்ளது.இதனால், கம்பம் பகுதி திராட்சை விலை படிப்படியாக அதிகரிக்கத் துவங்கியுள்ளது. நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தற்போது கிலோவிற்கு ரூ. 24 முதல் 26 வரை கிடைக்கிறது. இந்த விலை இன்னும் உயர வாய்ப்புள்ளதாக விவசாயிகள் கூறியுள்ளனர்.

## கடும் வெயிலால் வாழையின் குருத்துக்கள்... ஒருங்கிணைந்த முறை கடைபிடிக்க யோசனை

கோபிசெட்டிபாளையம்: டி.என்.பாளையம் சுற்று வட்டாரத்தில் கடும் வெப்பத்தால், வாழையின் குருத்துக்கள் கருகுவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

டி.என்.பாளையம், வாணிப்புத்தூர், பங்களாபுதூர், கொங்கர்பாளையம் உள்ளிட்ட இடங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் ரோபஸ்ட்ரா, கதளி, தேன் வாழை, பச்சை நாடன், மொந்தன் ஆகிய வகை வாழைக்கன்றுகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பருவமழை இன்றி கிணற்று பாசனம், போர்வெல் பாசனத்தில் சொட்டு நீர் மூலம் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் சென்ற சில வாரங்களாக வெயிலின் தாக்கம் அதிகளவில் உள்ளது. சில நாட்களாக வெயிலில் தாக்கம், 100 டிகிரியை கடந்துள்ளதால், வெப்ப சலனம் அதிகளவில் காணப்படுகிறது. வெப்பம் அதிகரிப்பால், சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழையின் குருத்தில் இலை கருகல் நோய் தாக்குதலும், சிறு இலை வைரஸ் நோய் தாக்குதலும் அதிகளவில் காணப்படுகிறது. கடும் வறட்சியில் சிக்கி தவிக்கும் விவசாயிகள், வாழை மூலம் குடும்பத்தை சமாளிக்கலாம் என நினைத்த நிலையில், வாழையின் குருத்தை காய்ந்து வருவது விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தி உள்ளது.

டி.என்.பாளையம் சுற்று வட்டாரத்தை சேர்ந்த வாழை விவசாயிகள் கூறியதாவது:

வாழைக்கன்றுகள், 15 முதல், 20 ரூபாய் கொடுத்து வாங்கி வருகிறோம். குழி வெட்டு கூலி, நடவு கூலி என ஏக்கருக்கு, 50 ஆயிரம் முதல், 70 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது.

அதைத்தொடர்ந்து பராமரிப்புக்கு என தனியாக செலவாகிறது. ஆயிரக்கணக்கில் செலவு செய்து வாழை பயிரிட்டுள்ள நிலையில், வெயில், வெப்பம் தாங்காமல் வாழையின் குருத்துக்கள் விரியாமல், சுருண்டு கிடக்கிறது. வாழையால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகி உள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுபோன்று ஈரோடு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதியில் வாழையில் நோய் தாக்கம்

காணப்படுகிறது. நோயை கட்டுப்படுத்த தோட்டக்கலை துறை நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

தோட்டக்கலை துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

டி.என்.பாளையம் சுற்று வட்டாரத்தில் ரோபஸ்ட்ரா, தேன், கதளி ஆகிய ரக வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு, சிக்கடோக்கா எனப்படும் பூச்சையால் வாழையில் இலை கருகல் நோய் ஏற்பட்டது. நோய் தாக்கிய வாழையில், இலை கருகியது. நடப்பாண்டு சாகுபடியில், வெப்பத்தால் வாழையின் குருத்துக்கள் காய துவங்கி உள்ளன.

தண்ணீர் பற்றாக்குறையால் வாழைக்கு போதுமா ன சத்து குறைபாடும் ஒரு காரணமாகும். ஒருங்கிணைந்த நோய் கட்டுப்பாடு முறைகளை விவசாயிகள் கையாள வேண்டும், என்றார்.

## குறைந்த செலவில் அதிக லாபம் கோதுமை சாகுபடியில் ஈடுபட விவசாயிகளுக்கு அறிவுரை

குன்னூர்:பாரம்பரிய பொருட்களின் சாகுபடியை ஊக்குவித்தல் குறித்த வட்டார கருத்தரங்கம், குன்னூர் வட்டாரத்தில் பெரிய பிக்கட்டி கிராமத்தில் நடந்தது.

இதில், மத்திய கோதுமை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி டாக்டர் விகாஷ் பேசுகையில்,

"" பாரம்பரிய சிறு தானிய பயிர்களான கோதுமை, சம்பா கோதுமை ஆகியவை உடல் நலத்துக்கு சத்தான உணவு வகைகளாகும். கோதுமை பயிர் வறட்சியை நன்கு தாங்கி வளரும், தேயிலையில் ஊடுபயிராக பயிரிடலாம்.

ஒரு ஏக்கருக்கு 1200 ரூபாய் செலவில் 30 கிலோ கோதுமையின் விதையை விதைத்தால், 2000 கிலோ மகசூல் கிடைக்கும்.

அதில் 15 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். நிரந்தர பயிர்களின் இடைவெளியில் கோதுமை சாகுபடி செய்யும் போது, 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும்," என்றார்.

கோத்தகிரி "கீஸ்டோன்' தொண்டு நிறுவனத்தை சேர்ந்த ஒருங்கிணைப்பாளர் ராபர்ட்லியோ பேசுகையில்,""சிறு தானிய பயிர்களை சாகுபடி செய்தால், விவசாயிகளுக்கு குறைந்த செலவில் அதிக லாபம் கிடைக்கும். பாரம்பரிய பயிர்களான கோதுமை, பாப்பரை, ராகி, கீரை, சாமை சாகுபடி செய்யும் போது, இதர பயிர்களை விட குறைந்த செலவில் வறண்ட பூமியிலும் வருவாய் பெறலாம்.

200 ஆண்டுகளுக்கு முன்பு, குன்னூர், கோத்தகிரி மற்றும் ஊட்டியில் பாரம்பரிய பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்து வந்தனர். நீலகிரி வாழ் மக்கள் நோயின்றி வாழ்ந்தனர்," என்றார்.

தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் மோகன் தோட்ட கலைத்துறையினர் திட்டங்களை விளக்கினார்.

கருத்தரங்கில், வேளாண்மை பொறியியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, மீன் வளத்துறை, குன்னூர் உபாசி வேளாண் அறிவியல் மையம், கால்நடை பராமரிப்பு துறை அலுவலர்கள் பங்கேற்று தொழில்நுட்ப கருத்துகள் மற்றும் திட்ட பயன்கள் குறித்து விளக்கினர்.

பெரிய பிக்கட்டி ஊர் தலைவர் ஜெயராமன் தலைமை வகித்தார்.தோட்ட கலைத்துறை உதவி இயக்குனர் சிபிலா மேரி வரவேற்றார்.

இதில், பெரிய பிக்கட்டி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் 300 பேர் பங்கேற்றனர்.

## உழவர் பெருவிழா கோலாகலம்

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில் சத்திரமனை, பூலாம்பாடி கிழக்கு, மேற்கு, புஜங்கராயநல்லூர், சில்லக்குடி வடக்கு, ஒகளூர் கிழக்கு, மேற்கு, வேலூர், அரும்பாவூர், அத்தியூர் வடக்கு, அத்தியூர் தெற்கு, பாடாலூர் கிழக்கு மற்றும் கண்ணப்பாடி ஆகிய வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடந்தது.

விழாவில் மண்புழு உரம் தயாரித்தல், மண் மாதிரிகள் எடுப்பது பற்றியும், கரும்பு கரணை விதை நேர்த்தி, ஒருங்கிணைந்த ஊட்டசத்து மேலாண்மை எலி ஒழிப்பு மற்றும் பார்த்தீனியம் ஒழிப்பு, மக்காச்சோளம், வெங்காயத்தின் மதிப்பு கூட்டுப்பொருட்கள் தயாரிப்பது. பருத்தி இயந்திரத்தின் செயல்பாடுகள் பற்றியும் செய்து காட்டப்பட்டது. திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம், நீடித்த நவீன கரும்பு சாகுபடி மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடைகளுக்கு சிசிச்சையும், தடுப்பு ஊசியும் போடப்பட்டது.

விழாவில் யூனியன்குழு தலைவர்கள், வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மை துணை இயக்குநர்கள், வேளாண்மை உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள், மற்றும் சகோதர துறைகளான தோட்டக்கலை, விற்பனை மற்றும் வணிகம், கால்நடை, வேளாண்மை பொறியியல், கூட்டுறவு, சர்க்கலை ஆலை, பருத்தி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், ரோவர் வேளாண் அறிவியல் நிலையம் அலுவலர்கள் தமது துறை சார்ந்த திட்டங்களை எடுத்துக் கூறினார்.

விழாவில் பயனாளிகளுக்கு மான்ய விலையில் இடுபொருட்கள் வழங்கப்பட்டது. விவசாயிகளின் அடிப்படை புள்ளி விபரங்கள் சேகரிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு வழங்கப்பட்டது.

## மல்லிகை சாகுபடியில் அதிக லாபம் விவசாயிகள் உற்சாகம்

அச்சிறுபாக்கம்:நெல் சாகுபடியை விட, மலர் சாகுபடியில் அதிக லாபம் கிடைப்பதாக, மல்லிகை பயிரிடும் விவசாயிகள் தெரிவித்தனர்.

அச்சிறுபாக்கம் ஒன்றியத்திற்குட்பட்டது ஆத்தூர். இங்கு நெல் சாகுபடிக்கு போதுமான தண்ணீர் இல்லாததால், பெரும்பாலான விவசாயிகள் மல்லிகை பயிர் செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். நெல் சாகுபடிக்கு, தினமும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

மல்லிகை பயிர் செய்தால், மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு ஒரு முறை, தண்ணீர் பாய்ச்சினால் போதும். மல்லிகை சாகுபடி செய்தால், ஏக்கருக்கு ஒரு லட்சம் முதல் இரண்டு லட்சம் ரூபாய் வரை லாபம் பெறலாம் என, விவசாயிகள் தெரிவித்தனர்.

லாபம் அதிகம்

இதுகுறித்து, மல்லிகை சாகுபடியில் ஈடுபட்டுள்ள ஆத்தூரை சேர்ந்த ஏழுமலை கூறியதாவது:

எனக்கு மூன்று ஏக்கர் நிலம் உள்ளது. ஏரி மதகு மூன்று ஆண்டுகளாக சரி செய்யப்படாததால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, கிணற்றிலும் தண்ணீர் குறைந்துள்ளது. எனவே, இரண்டு ஏக்கரில் வேர்க்கடலை, அரை ஏக்கரில் மல்லி பயிரிட்டுள்ளேன். மல்லி நாற்றுகளை காடு வெட்டியில் இருந்து வாங்கி வந்தேன்.

ஒரு செடி 2 ரூபாய் என, 2,000 செடி வாங்கி வந்து நட்டேன். உரமிட்டு, களை வெட்டி பராமரிக்க வேண்டும். ஆறு மாதங்களுக்கு பிறகு, பூ பூக்கத் துவங்கும். முதலில் 2 கிலோ முதல் 3 கிலோ வரை மல்லிகைப்பூ கிடைக்கும். பத்து மாதங்களுக்கு பிறகு, 8 முதல் 15 கிலோ வரை கிடைக்கும். பூக்கள் பூக்கவும், நோய் தாக்காமல் இருக்கவும், கை ஸ்பிரேயர் கொண்டு மருந்து அடிப்போம். அப்போது தான் பூக்கள் நன்றாக வரும். மல்லிகை பூக்களை, திண்டிவனம் மார்க்கெட்டிற்கு கொண்டு சென்று கொடுப்போம். அவர்கள் வாரம் அல்லது மாதம் ஒரு முறை பணம் தருவர். கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில், கிலோ மல்லிகை 500 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை விற்பனையாகும். மாதம் 4,000 ரூபாய் வரை, களை மருந்திற்கு செலவிடுவோம். மாதத்தில் செலவு போக, 10 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும். ஒரு ஏக்கரில் ஆண்டிற்கு ஒரு லட்சம் முதல்

இரண்டு லட்சம் ரூபாய் வரை லாபம் பெறலாம்.

மகிழ்ச்சி

மாதம்தோறும் பணம் கிடைப்பதால், வீட்டு தேவைகள் மற்றும் குழந்தைகளின் படிப்பு செலவிற்கு, சிரமம் இல்லாமல் இருக்கும். குறைவாக பூ கிடைக்கும் போது, வீட்டில் உள்ள நான்கு பேரே பூ எடுத்து விடுவோம். அதிகம் கிடைக்கும் நாட்களில், ஆட்கள் வைத்து பறிப்போம். மல்லிகை பயிர் செய்ததன் மூலம், வாழ்க்கை சிரமம் இல்லாமல் ஓடுகிறது.

இவ்வாறு, ஏழுமலை தெரிவித்தார்.

மானியம்

சித்தாமூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் மிஸ்ரா கூறியதாவது:

மல்லிகை செடிகளை, ஜூன், ஜூலை மாதத்தில் நட வேண்டும். அப்போது தான் தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் இருக்கும். ஒரு ஏக்கருக்கு, 2,500 செடி நடலாம். அரசு தோட்டக்கலைத் துறை சார்பில், ஆத்தூர், மேல்கதிர்பூர், பிச்சிவாக்கம், விச்சந்தாங்கல், ஆகிய இடங்களில் பண்ணைகள் உள்ளன.

இங்கு, மல்லிகை செடி 50 சதவீத மான்ய விலையில், ஒரு செடி 2.50 ரூபாய்க்கு கிடைக்கிறது. ராமேஸ்வரம் மல்லி செடி, தற்போது, போதுமான அளவில் இருப்பு உள்ளது.

விவசாயிகள் அவற்றைப் பெற, தங்கள் நிலத்தின் சர்வே எண்ணை சொன்னால் போதும். மான்ய விலையில் செடி கிடைக்கும்.

மல்லிசெடியை, 1 மீட்டர் இடைவெளியில் நட்டு பராமரித்தால், அதிக லாபம் கிடைக்கும். சிறு, குறு விவசாயிகளுக்கு, சொட்டு நீர் பாசன பைப்புகள், 100 சதவீத மான்ய விலையில் கிடைக்கும். மற்ற விவசாயிகளுக்கு, 75 மான்ய விலையில் சொட்டு நீர் பாசன பைப்புகள் கிடைக்கும். இவற்றை வாங்கி, விவசாயிகள் பலன் பெறலாம். இவ்வாறு, அவர் கூறினார்.

## விவசாயிகள் குறை தீர்வு கூட்டம் 22ம் தேதிக்கு ஒத்தி வைப்பு

காஞ்சிபுரம்:காஞ்சிபுரத்தில், இன்று நடைபெறுவதாக இருந்த, விவசாயிகள் குறை தீர்வு கூட்டம், வரும் 22ம் தேதிக்கு, ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு கூட்டம், மாதம்தோறும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும். இம்மாதத்திற்கான கூட்டம், இன்று காலை 10:00 மணிக்கு, நடைபெறுவதாக இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால், இன்று நடைபெறவிருந்த கூட்டம்,

22ம் தேதி மாலை 3:00 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறும் என, மாவட்ட ஆட்சித் தலைவர் சித்ரசேனன் தெரிவித்துள்ளார்.

## கால்நடை, மீன் வளர்ப்புத் துறை நாளை தொழில் நுட்ப கண்காட்சி இரு அமைச்சர்கள் பங்கேற்பு

விழுப்புரம்:கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு குறித்த தொழில் நுட்ப கண்காட்சி விழுப்புரத்தில் நடக்கிறது.

இது குறித்து கலெக்டர் சம்பத் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது :

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் மற்றும் விழுப்புரம் மண்டல கால்நடை பராமரிப்பு துறை மூலம், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு தொழில் நுட்ப கண்காட்சி நடக்கிறது. விழுப்புரம் காமராஜர் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில், நாளை கண்காட்சி துவங்குகிறது.

கண்காட்சியை ஊரக தொழில் துறை அமைச்சர் மோகன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் சின்னையா ஆகியோர் துவக்கி வைக்கின்றனர். நாளை (20ம் தேதி) துவங்கி 22ம் தேதி வரை 3 நாட்கள் நடக்கவுள்ள இக்கண்காட்சியில் கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்பு தொடர்பான 80 அரங்குகள் அமைக்கப்படுகிறது.

தினமும் தொழில் நுட்ப கருத்தரங்கு மற்றும் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்படும். கால்நடை, மீன் வளர்ப்பு தொடர்பான புத்தகங்கள், சி.டி.,க்கள் மற்றும் தீவனப் பயிர் விதைகள் விற்பனை செய்யப்படும்.

முகாமில் கால்நடை ஆயுள் காப்பீடு, வங்கி கடன் உதவிகள், பல்கலைக் கழகத்தில் நடத்தப்படும் பட்டப் படிப்புகள், பட்டயப் படிப்புகள், சான்றிதழ் பயிற்சிகள், தொழில் முனைவோருக்கான செயல் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் குறித்து விளக்கம் அளிக்கப்படுகிறது.

சென்னை மாநகர காவல்துறை, ரயில்வே பாதுகாப்பு படை, ஒருங்கிணைந்த ரயில்வே கட்டுமான பணித்துறை படை ஆகியவற்றின் செல்ல பிராணிகளின் சாகசம், வரும் 21ம் தேதி நடக்கிறது.

இத்தொழில் நுட்ப கண்காட்சியில் கால்நடை வளர்ப்போர், கால்நடை பண்ணை தொழில் முனைய விரும்புவோர், பள்ளி மாணவர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

இவ்வாறு கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

## சங்கராபுரத்தில் உழவர் பெருவிழா : அமைச்சர் மோகன் துவக்கி வைத்தார்

சங்கராபுரம்:சங்கராபுரத்தில் வேளாண்மை துறை சார்பில் நடந்த உழவர் பெரு விழாவை அமைச்சர் மோகன் துவக்கி வைத்தார்.

கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். வேளாண்மை இணை இயக்குனர் சேகர் வரவேற்றார். திட்ட இயக்குனர் முத்துமீனாள், ஒன்றிய சேர்மன்கள் அரசு, ராஜசேகர் முன்னிலை வகித்தனர். விழாவை அமைச்சர் மோகன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கி பேசினார். முன்னதாக வேளாண்மைதுறை சார்பில் நடந்த கண்காட்சியை பார்வையிட்டார்.

கால்நடை பராமரிப்பு துறை மண்டல இயக்குனர் டாக்டர் அழகரசன், கள்ளக்குறிச்சி உதவி இயக் குனர் டாக்டர் ராஜேந்திரன், பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் விஸ்வநாதன், ஆர்.டி.ஓ., ராஜசேகரன், தாசில்தார் அற்புதசாமி, ஊராட்சி தலைவர்கள் சம்சாத்பேகம் ஷாஜகான், மாரியப்பன், மகேந்திரன், இளைஞரணி செயலாளர் குசேலன், வட்டார கல்விக் குழு தலைவர் ராஜேந்திரன், நகர செயலாளர் நாராயணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஏமாற்றிய கோடை மழை: தர்மபுரி மக்கள் சோகம்

தர்மபுரி: தர்மபுரியில் தொடர்ந்து கோடை மழைக்கான அறிகுறிகள் இருந்த போதும், காற்று வீசுவதால், மழை ஏமாற்றி வருகிறது.

தர்மபுரி மாவட்டத்தில், பருவமழை பொய்த்து போன நிலையில், இந்தாண்டு எப்போதும் இல்லாத அளவுக்கு கோடை வெயில் வாட்டி வருகிறது. ஒரு மாதமாக, 100 டிகிரிக்கு மேல் வெயில் வாட்டி வருகிறது.வெயில் காரணமாக, நீர் ஆதாரங்கள், தண்ணீர் இன்றி வறண்டன. விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. மாவட்டம் முழுவதும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்ட சோதனை ஓட்டத்தின் காரணமாக, பஞ்சாயத்து பகுதியில், சில நாட்களாக தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

கோடை வெயில் வாட்டும் நாட்களில், கடந்த காலங்களில், கோடை மழை பெய்யும். இந்தாண்டு கோடை மழைக்கான அறிகுறிகள் அடிக்கடி தென்பட்ட போதும், போதிய மழை இல்லாமல் ஏமாற்றி வருகிறது. நேற்று முன்தினம் இரவு திடீரென மழை பெய்தது. ஆனால், சாரல் மழையுடன் முடிந்தது.நேற்று காலை, வெயில் வாட்டிய நிலையில், மதியம், 2 மணிக்கு மேல் வெயில் தணிந்து, திடீரென மழைக்கான அறிகுறிகளுடன் வானம் இருண்டது. மதியம், 2.25 மணிக்கு லேசான சாரல் மழை பெய்தது. தொடர்ந்து காற்று வீசியதால், ஐந்து நிமிடம் மழை பெய்து நின்றது. வழக்கம் போல் மழை ஏமாற்றியது.

தொடரும் வெயில் தாக்கத்தில் இருந்து தப்பிக்க, கோடை மழை வலுவாக பெய்ய வேண்டும் என, பொதுமக்களும், விவசாயிகளும் எதிர்பார்க்கின்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

19.04.2013 A.M

---

## தொடர் மழையால் சாகுபடியில் விவசாயிகள் தீவிரம்

ஊட்டி, : நீலகிரியில் கட ந்த சில தினங்களாக மழை பெய்து வரும் நிலையில் அனைத்து பகுதிகளிலும் விவசாயிகள் விவசாயம் செய்ய துவங்கியுள்ளனர்.

ஆண்டு தோறும் ஜுன் மாதம் துவங்கி நவம்பர் மாதம் வரை நீலகிரியில் மழை பெய்யும்.இது போன்ற சமயங்களில் தாழ்வான பகுதிகளில் விவசாயம் மேற்கொள்ள முடியாது.அதே சமயம் மலைப் பாங்கான பகுதிகள் மற்றும் சமமான பகுதிகளில் அதிகளவு விவசாயம் மேற்கொள்வார்கள்.

ஆனால், இம்முறை தென்மேற்கு பருவமழை மற்றும் வட கிழக்கு பருவமழை பொய்த்த நிலையில் நீலகிரி மாவட்டத்தில் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டது. வழக்கத்தை காட்டிலும் நேர்மாறாக இம்முறை தாழ்வான பகுதிகளில் மட்டுமே விவசாயம் மேற்கொள்ள முடிந்தது.

இந்நிலையில், கடந்த சில இரு தினங்களுக்கு மேலாக நீலகிரி மாவட்டத்தில் பரவ லாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் அவ்வப்போது லேசானது முதல் கன மழை பெய்து வருகிறது.

இதனால் பல மாதங்களுக்கு பின் விவசாயிகள் விவசாயம் செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். ஊட்டியில் கடந்த ஒரு வார காலமாக மேக மூட்டம் மற்றும் அவ்வப்போது மழை பெய்து வரும் நிலையில் ரம்மியமான காலநிலை நிலவுகிறது. கடந்த இரு மாதங்களாக ஊட்டியில் வெயில் வாட்டி வந்த நிலையில் ஒரு வார காலமாக வெயில் குறை ந்துள்ளதால் இரவு நேரங்களில் குளிரும் காணப்படுகிறது. இதனை சுற்றுலா பய ணிகள் மட்டுமின்றி உள்ளூர் மக்களும் குளுகுளு சீசனைஅனுபவித்து வருகின்றனர்.

## அறுவடை செய்த பின்னர் பருத்தி, மக்காச்சோள சருகை கவனமுடன் எரிக்க வேண்டும் அதிகாரி தகவல்

பெரம்பலூர், : அறுவடை செய்யப்பட்ட பருத்தி, மக்காச்சோள வயல்களில் சருகுகளை கொளுத்தும்போது விவசாயிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று பெரம்பலூர் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கோட்ட அலுவலர் சுப்ரமணி தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பாக தீத்தொண்டு நாள் வாரவிழா 14ம்தேதி தொடங்கி 20ம் தேதி வரை நடைபெறுகிறது.

பெரம்பலூரில் தீத்தொண்டு வாரநாள் விழாவையொட்டி நேற்று பெரம்பலூர் பழைய பஸ் நிலையம் பகுதியில் பெரம்பலூர் தீயணைப்புத்துறை நிலைய அலுவலர் ஜெகதீஸ் தலைமையில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினர் 10க்கும் மேற்பட் டோர், விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய துண்டு பிரசுரங்களை பொது மக்களிடம் விநியோகித்தனர்.

இதுகுறித்து தீயணைப்புத் துறையின் பெரம்பலூர் கோட்ட அலுவலர் சுப்ரமணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கோடை காலத்தில் அதிக வெப்பம் காணப்படுவதோடு, சூறைக்காற்று வீசக்கூடும். இதனால் காய்ந்த சருகுகள் மீது தீப்பொறி விழுந்தால், அது எளிதில் பற்றிப் பரவி மிகுந்த சேதத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. எனவே அறுவடை செய்யப்பட்ட பருத்தி, மக்காச்சோள வயல்களில் சருகுகளை கொளுத்தும்போது விவசாயிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

அருகிலுள்ள மின்கம்பங்களில் பிடித்தால் கடும் விளைவுகளை ஏற்படுத்தும். வீடுகளில் காஸ் அடுப்பை பற்றவைக்க லைட்டரை பயன்படுத்த வேண்டும். தீக்குச்சியை பயன்படுத்த வேண்டாம். சமைத்த பிறகு ரெகு லேட்டரை மூடவேண்டும். வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே செல்லும் முன் அனைத்து மின்சாதனங்களையும் சுவிட்ச்ஆப் செய்துவிட்டுச் செல்லவேண்டும்.

மின்சாரம் இல்லாத நேரங்களில் டிவி, பிரிட்ஜ், வாஷிங்மெஷின் போன்ற மின் சாதனங்கள் மீது மெழுகுவர்த்தியை ஏற்றிவைக்ககூடாது.

சமையலறையில் திடீரென ஏற்படும் தீ விபத்தை தடுக்க சிறிய உலர்மாவு தீய  ணைப்பான் (டிசிபி-அரைகிலோ) பொருத்த வேண்டும். தீ விபத்து ஏற்பட்டால் தீ,தீ என சத்தமாக மற்றவரை உதவிக்கு அழைக்கவேண்டும். தனியே தீயணைக்கும் முயற்சி யில் ஈடுபடக்கூடாது. உடலில் தீப்பற்றிக்கொண்டால் அங்கிருந்து வேறு இடங்களுக்கு ஓடக்கூடாது. கீழேபடுத்து உருளவேண்டும். வீட்டினுள் பெட்ரோல், டீசல் போன்ற வற்றை கேன்களில் சேமித்து வைக்கக்கூடாது. இவை எளிதில் தீப்பற்றிக் கொள்ளும்.

தீ மற்றும் அவசர உதவிக்கு பெரம்பலூர் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திற்கு தொலைப்பேசி எண்களான 101, 224255 மற்றும் செல்போன் எண் 94 45086441 ஆகியவற்றிற்கு

தொடர்புகொண்டு புகார் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

காஸ் சிலிண்டரை கையாளும் முறை....

சமைப்பதற்காக காஸ் சிலிண்டரைப் பயன்படுத்தும்போது கவனக்குறைவாக, கதவை சாத்திவிட்டு வெளியே செல்லக்கூடாது. குழந்தைகளை தீப்பெட்டி போன்ற எளிதில் எரியக்கூடிய பொருட்களுடன் விளையாட அனுமதிக்கக்கூடாது. காஸ் சிலிண்டரில் கசிவு ஏற்பட்டால் உடனே கதவு, ஜன்னல்களை திறந்து வைக்க வேண்டும். பட்டாசு, கம்பி மத்தாப்பு, புஸ்வாணம், ராக்கெட் போன்றவற்றை திறந்த மைதானங்களில் மட்டுமே வெடிக்க வேண்டும். வீடுகள் உள்ளே மற்றும் கூரைவீட்டுக்கு அருகே வெடிகளை வெடிக்கக் கூடாது என்று அதிகாரி சுப்ரமணி தெரிவித்துள்ளார்.

## தோட்டக்கலைப் பயிர்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்

பாடாலூர், : பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா எலந்தலப்பட்டி ஊராட்சியில் தோட்டக்கலைப் பயிர்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

தோட்டக்கலைத் துறை அலுவலர் மனோகரன் தலைமை வகித்து பேசியதாவது: தோட்டக்கலைத் துறை மூலம் அரசு வெங் காய விதைகள், எலுமிச்சை, கொய்யா மற்றும் மலர் கன்றுகள் மானிய விலை யில் வழங்கப்பட்டு வருகி றது. மேலும், மினி டிராக் டர், கை மருந்து தெளிப் பான், மருந்து அடிக்கும் பவர் ஸ்பிரே, இயற்கை உரம் போன்றவை மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இது போன்ற தோட்டக் கலைப் பயிர்கள் விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டு அதிகளவில் லாபம் பெறலாம்.

விவசாயப் பயிர்களுக்கு அரசுத்துறையில் காப்பீடு செய்து தரப்படுகிறது. இதுபோல் அரசுத்தரப்பில் வழங்கும் மானியங்களை விவசாயிகள் பெறஂறு பயன் பெற வேண்டும்.

அதேபோல் சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், கோடை காலங்களில் வெப்பத்தை குறைக்கவும், அதிகளவில் மழை பெறவும் விவசாயிகள் தங்கள் நிலங்களிலும், விவசாயத்திற்கு பயன்படாத பகுதிகளிலும் மரக்கன்றுகளை அதிகளவில் நட்டு, அதனை முறையாக பராமரித்து வளர்க்க முன்வர வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

எலந்தலப்பட்டி ஊராட்சி தலைவர் கீதா பாலு, துணைத் தலைவர் செல்வராஜ், விவசாய சங்க தலைவர் துரைராஜ், ஒன்றியக்குழு உறுப்பினர் ரமேஷ் கலந்து கொண்டனர்.

## உழவர் தின விழா விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவி

தா.பழூர், : தா.பழூர் அருகே நடைபெற்ற உழவர் தின விழாவில் திருந்திய நெல் சாகுபடி பயிர் செய்யும் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியத்தில் அரசின் சிறப்புத்திட்டமான உழவர் தின துவக்க விழா இடங்கண்ணி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. தா.பழூர் உதவி வேளாண் அலுவலர் ராஜா வரவேற்றார். வட்டார வேளாண் உதவி இயக்குனர் அண்ணாதுரை தலைமை வகித்தார். விழாவை ஊராட்சி தலைவர் ஆனந்தி துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

நிகழ்ச்சியில் தோட்டக்கலை துறை உதவி வேளாண்மை அலுவலர் தமிழ்வாணன், சாந்தி, செந்தில்குமார், வேளாண்மை பொறியியல் துறை இள நிலை பொறியாளர் ரவிச்சந்திரன், சோழமாதேவி கிரீடு வேளாண்மை அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து, வேளாண் விற்பனை மற்றும் வணிக அலுவலர் குமாரபாண்டியன் ஆகியோர் திட்டங்கள் குறித்து பேசினர். விவசாயிகளுக்கு மண்மாதிரி எடுத் தல், எலி ஒழிப்பு செய்தல், கால்நடைமுகாம், அரசின் வேளாண்மை திட்டம் உள்ளிட்ட பல் வேறு திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் காண்பிக்கப்பட்டது.

திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை ரூ.2 ஆயி ரம் மதிப்பில் காசோலை 5 பேருக்கு வழங்கப்பட்டது. மானிய விலையில் விசைத்தெளிப்பான் கருவி மற்றும் விவசாய இடுபொருட்கள் வழங்கப்பட்டது. தொடர்ந்து கால்நடை மருத்துவர் அறிவுச்செல்வன் தலைமையில் நடைபெற்ற கால்நடை மருத்துவ முகாமில் குடற்புழு நீக்கம், சினை பரிசோதனை, நோய்தடப்பூசி என கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அட்மா திட்ட அலுவலர்கள் சகாதேவன், உஷா, குமணன்  உதவி வேளாண்மை அலுவலர்கள் சிவக்குமார், கலையரசன், ஜோதி, செந்தில்குமார், சபாபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். துணை வேளாண்மை அலுவலர் சொக்கலிங்கம் நன்றி கூறினார்.

## ராசிபுரத்தில் மழை; மக்கள் மகிழ்ச்சி

ராசிபுரம்,: ராசிபுரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த சில வாரங்களாக கடும் வெயில் வாட்டி வதைத்தது. இதனால் மக்கள் மதிய நேரங்களில் வெளியே செல்ல கடும் சிரமத்துடன் சென்று வந்தனர்.

வெயிலின் தாக்கத்தை தணிக்க குளிர்பான கடைகளிலும், தர்பூசணி, நுங்கு விற்பனை கடைகளில் மக்கள் கூட்டம் அதிகம் காணப்பட்டது. இந்நிலையில் நேற்று காலை முதல் கடும் வெயில்

காணபட்டது. மதியம் மூன்று மணிவரை நீடித்த வெயிலின் தாக்கம் அதன் பின் சற்று குறைந்தது. தொடர்ந்து வானம் கருமேக மூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் மதியம் மூன்றரை மணியளவில் திடீரென மழை பெய்ய துவங்கியது. சுமார் ஒரு மணிநேரத்திற்கும் மேல் பெய்த மழையினால் ராசிபுரம் நகராட்சியில் உள்ள தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி நின்றது. பல நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்திருந்த நிலையில் நேற்று மாலை பெய்த மழையினால் வெப்பம் தணிந்ததால் நேற்றிரவு  பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## விவசாயிகள் ஏமாற்றம் 2 ஆண்டில் ஒருமுறை கூட நிரம்பாத பவானிசாகர்

ஈரோடு, :பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியால் நீர்வரத்து வெறும் 15 கனஅடியாக குறைந்து போனதால் பவானிசாகர் அணையை நம்பியுள்ள பாசன விவசாயிகள் பெரும் ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளனர்.

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையின் மொத்த உயரம் 120 அடியாக இருந்த போதிலும், 15 அடி உயரத்திற்கு சேறும், சகதியுமாக உள்ளதால் 105 அடி உயரத்திற்கு மட்டுமே தண்ணீர் தேக்கி வைக்க முடியும். அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான கேரளாவிலும், நீலகிரி மாவட்டத்திலும் கடுமையான வறட்சி நிலவி வருகிறது.

இதன் காரணமாக கேரளாவில் இருந்தும், நீலகிரி மாவட்டத்தின் மோயாறு பள்ளத்தாக்கு, கல்லாறு, பர்லியாறு பள்ளத்தாக்கு, அப்பர்பவானி பள்ளத்தாக்கு பகுதிகளிலும் நீரோட்டம் வெகுவாக குறைந்து விட்டது.

முதுமலை வனப்பகுதியையொட்டி மோயாறு மற்றும் நீலகிரி வடக்கு மற்றும் தெற்கு வனக்கோட்ட பகுதிகளில் வசிக்கும் யானைகள், மான், காட்டெருமைகள் போன்ற விலங்குகள் குடிநீர் கூட கிடைக்காமல் கடும் அவதியடைந்து வருகின்றன.

கடந்த 2 வாரத்திற்கு முன்பு நீலகிரியில் பெய்த மழையால், பவானிசாகர் அணைக்கு ஒரேநாளில் 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் கனஅடி நீர் வரத்தானது. மழை ஓரிரு நாட்கள் மட்டுமே பெய்து வறண்ட வானிலைக்கு மாறி விட்டதால் மீண்டும் பவானிசாகர் அணையின் நீர்வழிப்பாதைகளில் வறட்சி தலை தூக்கியது.

இந்நிலையில், கீழ்பவானி பாசனத்துக்குட்பட்ட முதலாம் மண்டலத்திற்கு உயிர் தண்ணீர் திறப்பதற்காக நீலகிரி நீர்மின் அணைகளில் இருந்து கடந்த 2 வாரமாக தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், பள்ளத்தாக்கு மற்றும் ஆற்றுப்பகுதிகளில் நீரோட்டம் இருந்தது.தற்போது, கோடை வெப்பம் கடுமையாக உள்ளதால் பெரும்பாலான ஓடைகள், குளங்கள் வற்றி விட்டன. நேற்று

பவானிசாகர் அணையின் நீர்வரத்து வெறும் 15 கனஅடியாக குறைந்து விட்டது. அணைக்கு நீர்வரத்து வெகுவாக குறைந்துள்ள நிலையில் அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 4 மணி நிலவரப்படி 41.11 அடியாகவும், அணையிலிருந்து கீழ்பவானி பாசனத்துக்கு 2 ஆயிரம் கனஅடியும், குடிநீர் தேவைக்கு 150 கனஅடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் 43.81அடியாக இருந்த நிலையில் இரண்டே நாளில் 2.5 அடி நீர்மட்டம் சரிவடைந்துள்ளதும் விவசாயிகளிடம் கவலையை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 2 ஆண்டாக ஒருமுறை கூட அணை நிரம்பாத நிலையில் இந்த ஆண்டிலாவது வறட்சியின் கோரப்பிடியில் இருந்து பவானிசாகர் நீர்ப்பிடிப்பு பகுதிகள் மீள வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பு.

## தேயிலை எஸ்டேட்டில் ஊடுபயிராக கோதுமை பயிரிடலாம்

குன்னூர்,: குன்னூர் அருகே உள்ள பெரிய பிக்கட்டி கிராமத்தில் பாரம்பரிய விவசாய சாகுபடி ஊக்குவித்தல் கருத்தரங்கம் மற்றும் உழவர் திருவிழா நேற்று நடந்தது. இதில் மத்திய கோதுமை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி டாக்டர் விகாஸ் பங்கேற்று கோ துமை, சம்பா கோதுமை, பரம்பரை சாகுபடி முறைகள் குறித்து விளக்கம் அளித்தார். மேலும் வறட் சியை தாங்கி வளரும் கோதுமை பயிரை தேயிலைச்செடிகளுக்கிடையே ஊடுபயிராக பயிரிடுவது குறித்தும், இதன் மூலம் கிடைக்கும் வருமானம் குறித்தும் எடுத்துக் கூறினார். இதைத்தொடர்ந்து சிறுதானிய பயிர்களான ராகி, கீரை, சாமை ஆகியவற்றை வறண்ட நிலத்தில் சாகுபடி செய்வதன் மூலம் நிலச்சரிவு அபாயத்தை தடுக்கலாம் என்றும் கூறினார். தொ டர்ந்து தோட்டக் கலைத்துறையின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் மோகன் பேசினார். இதில் அனைத்து துறை அதிகாரிகள் பங்கேற்றனர். முன்னதாக குன்னூர் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் சிபிலா தேவி வரவேற் றார். முடிவில் கிராமத்தலைவர் ஜெயராமன் நன்றி கூறினார்.இதேபோல் குன்னூர் அருகே உள்ள மேலூர் ஒசட்டி கிராமத்தில் நடந்த உழவர் பெருவிழாவிற்கு கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் முரளிசெல்வன் தலைமை வகித்தார்.

துணை வேளாண் மை அலுவலர் நஞ்சன் வரவேற்று பேசினார். கிராம தலைவர்கள் அல்லி அய்யா, கோபால், சுப்பிரமணி ஆகியோர் பேசினர். கால்நட உதவி மருத்துவர் கார்த்திக் குமார், உதவி வேளாண்மை அலுவலர் சிவகுமார், குன்னூர் உழவர் சந்தை வேளாண் பொறி யியல் துறை அலுவ லர் சரவணகுமார் உள்ளிட்டோர் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு குறித்து பேசினர். இதனையடுத்து தோட்டக்கலை துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து

விரிவாக எடுத்துக் கூறப்பட்டது, முடிவில் தோட்டக் கலைத்துறை உதவி இயக்குனர் சிபிலா மேரி நன்றி தெரிவித்தார்.

## கரூரில் திடீர் மழை

கரூர், : கரூரில் திடீர் மழைபெய்ததால் கட்டடங்களுக்குள் வெப்பம் அதிகமானது.

கரூர் பகுதியில் கடந்த 10 நாட்களாக சுட்டெரிக்கும் வெயில் அடிக்கிறது. பகல்நேரத்தில் வெளியில் நடமாட முடியாத அளவுக்கு வெயில் கொளுத்துவதால் அனல் காற்று வீசுகிறது. இந்நிலையில் நேற்று மாலை திடீரென மழை பெய்தது. 10 நிமிடம் மழை பெய்ததால் அனல் காற்று தணிந்தது. சாலையில் செல்பவர்களுக்கு வெப்பம் தணிந்து காணப்பட்டது. ஆனால் நகர பகுதியில் நெருங்கிய கட்டடங்களுக்குள் இருந்தவர்கள் வெப்பம் தாங்க முடியாமல் அவதிப்பட்டனர். திடீர் மழை சூட்டை கிளப்பி விட்டது. தொடர்ந்து காற்று அடிக்காததால் இரவு வரை கட்டடங்களுக்குள் வெப்பம்

தகித்துக்கொண்டிருந்ததால் அவதிப்பட்டனர்

## வறட்சி காரணமாக அமராவதி பாசன பகுதியில் வாழைகள் கருக தொடங்கின காப்பாற்ற விவசாயிகள் கடும் முயற்சி

கரூர், : வறட்சி காரணமாக அமராவதி பாசன பகுதியில் வாழைகள் கருகும் நிலையில் உள்ளன. வறட்சி காற்றில் இருந்து காப்பாற்ற விவசாயிகள் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடகிழக்கு பருவ மழை பொய்த்ததால் கரூர் மாவட்டத்தில் பயிர் சாகுபடிக்குத் தேவையான அளவு மழை பெய்யவில்லை. நிலம் புயல் காரணமாக கடந்த அக் டோபர் மாதத்தில் ஓரளவு மழை பெய்தது. நவம்பர் மாதத்திலும் குறிப்பிட்ட அளவு மழை பொழிவு இல் லை. டிசம்பர் மாதத்திலும் தூறல் மழை மட்டுமே பெய்தது. தற்போது வங்க கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானதால் ஜனவரியில் ஓரளவு மழைபெய்தது. பிப்ரவரி மாதம் திடீர் மழை பெய்தது. அமராவதி ஆற்றங்கரையோரம் கிணற்றுப்பாசனத்தை பயன்படுத்தியும் அவ்வப்போது பொழியும் சிறிய அளவிலான மழை நீரை பயன்படுத்தியும் வாழை சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. கரூர் விஸ்வநாதபுரி, பள்ளபாளையம், செட்டிபாளையம், அப்பிபாளையம் உள்ளிட்ட அமராவதி ஆற்றுப்படுகையில் 50 ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது, ஓராண்டு பயிரான வாழை குலைதள்ளும் நிலையில் இருக்கிறது. இன்னும் 10 நாட் களில் அறுவடைக்கு தயா ராகும் நிலையில் உள்ளது.

கிணற்றுப்பாசனம் மூலமாக தேவையான தண்ணீரை மோட்டார் மூல மாக வாழை பயிர்களுக்கு

விவசாயிகள் பாய்ச்சி வருகின்றனர். திடீரென அவ்வப்போது காற்று வீசுவதும் நிற்பதுமாக இருக்கிறது. இதனால் காற்றிலிருந்து வாழையை காப்பாற்றுவதற்கான நடவடிக்கைளிலும் இப்பகுதி விவ சாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

வாழை விவசாயி செல்வராஜ் கூறுகையில், அமராவதி ஆற்று நீரை நம்பி இந்தாண்டு விவசாயம் செய்ய முடியவில்லை. ஆறு வறண்டு போய் கிடக்கிறது. கிணற்றுப்பாசனம் மூலமாகவும், ஆழ்குழாய் கிணறுகளை ஆங்காங்கே அமைத்தும் பம்ப் செட் மூலமாக குறைந்த அளவில அமராவதி பாசன பகுதியில் ஆற்றுப்படுகைகளில் வாழை பயிரிடப்பட்டது. தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. கடும் வெயில் காரணமாக கருகும் நிலையில் இருப்பால் கூடுதல் கவனம் செலுத்தி நீர் பாய்ச்சப்படுகிறது. மேலும் திடீர் காற்றால் வாழை மரங்கள் சரிந்து விடாமல் இருப்பதற்காக கட்டைகளை பயன்படுத்தி முட்டுக்கொடுக்கும் வேலையும் நடைபெற்று வருகிறது.

கடந்த ஆண்டை விட வாழை உற்பத்தி இந்தாண்டு வெகுவாக குறைந்துவிட்டது. இதனால் விலையும் உயர்ந்திருக்கிறது. ஆனாலும் விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை இல்லை. கூடுதல் செலவு ஏற்பட்டும் கூடுதல் விலை கிடைக்கவில்லை. ஆனால் கடைகளில் வாழை இலை ரூ.2க்கும், வாழைப்பழம் ரூ.2.50க்கும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது என்றார்.

## உழவர் பெருவிழாவில் மானிய திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம்

சீர்காழி, : நாகை மாவட்டம் சீர்காழி அருகே வைத்தீஸ்வரன்கோவிலில் உழவர் பெருவிழா நடைபெற்றது.

மாவட்ட ஊராட்சி தலைவர் சந்திரசேகரன் தலைமை வகித்தார். முன்னாள் எம்எல்ஏ பூராசாமி, ஒன்றியக்குழு தலைவர் பாரதி, ஒன்றிய செயலாளர் ராஜமாணிக்கம், பேரூராட்சி தலைவர் ராமலிங்கம், துணை தலைவர் போகர் ரவி, ஒன்றிய ஜெ.பேரவை செயலாளர் நாடி ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குனர் ராமகிருஷ்ணன் வரவேற்றார். சீர்காழி எம்எல்ஏ சக்தி உழவர் பெருவிழா பிரசார ஊர்தியை துவக்கி வைத்து பேசினார். அப்போது சீர்காழி ஒன்றியத்தில் உழவர் பெருவிழா மே 11ம்தேதி வரை நடைபெறுகிறது. இதில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விவசாய உபகரணங்கள் வழங்கப்படுகிறது என்றார். விழாவில், மாவட்ட அவை தலைவர் செல்லையன், உதவி விலை அலுவலர் பிரபாகரன், வேளாண்மை அலுவலர் எழில்ராஜ், துணை வேளாண்மை அலுவலர் பன்னீர்செல்வம், பொறியாளர் ஸ்ரீதர், உதவி அலுவர்கள் ராமகிருஷ்ணன், சிவபெருமாள், அசோகன், சிவக்குமார்,

விஜய்அமிர்தராஜ், ஒன்றிய பொருளாளர் அமிர்தலிங்கம், துணை செயலாளர் ரவிசந்திரன், மகளிர் அணி செயலாளர் அஞ்சம்மாள், கவுன்சிலர் பாண்டியன், முத்து கலந்து கொண்டனர்.

கொள்ளிடம்: நாகை மாவட்டம், கொள்ளிடம் அருகே உள்ள நல்லவிநாயகபுரம் கிராமத்தில் ஊராட்சி தலைவர் நாகராஜன் தலைமையில் உழவர் பெருவிழா நடந்தது. வேளாண். அலுவலர் உண்ணாமலை வரவேற்றார். ஊராட்சி துணை தலைவர் சேகர் முன்னிலை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் பால்ராஜ் சிறப்புரையாற்றினார். விதை நேர்த்தி செயல்விளக்கம் மற்றும் மண்மாதிரியின் முக்கியத்துவம் குறித்து ஆத்மா அலுவலர் ரேகா பேசினார். அதிக மகசூல் பெற செயல்படுத்திய தொழில்நுட்பம் குறித்து சாதனை விவசாயி சுப்பிரமணியன் கருத்துக்களை கூறினார். தோட்டப்பயிர் சாகுபடி, திருந்திய நெல்சாகுபடி மான்ய திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. சிக்கல் வேளாண் அறிவியல் கல்லூரி பேராசிரியை தங்கமணி, வேளாண் உதவி அலுவலர்கள் செல்வராஜ், ராமசந்திரன், மகேஷ், கனகராஜ், மற்றும் விவசாயிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். வேளாண் உதவி அலுவலர் சந்திரசேகர் நன்றி கூறினார்.

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ராயநல்லூர் ஊராட்சியில் உழவர் பெருவிழா ஊராட்சி தலைவர் சரோஜா தலைமையில் நடைபெற்றது. வேளாண் அலுவலர் தெய்வேந்திரன் வரவேற்றார்.  தரமான விதை பிரித்தல், மண் ஆய்வு செய்தல், இலை வண்ண அட்டை பயன்படுத்துதல் போன்ற செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டது. வேளாண் மை உதவி இயக்குநர் நடேசன், ஒன்றிய குழு தலைவர் வேதநாயகி சிங்காரவேலு, துணைத்தலைவர் வெற்றிவேல்,  நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட கவுன்சிலர் தமிழ்ச்செல்வி ராஜா, ஒன்றிய கவுன்சிலர் ஞானசௌந்தரி ஆகியோர் பேசினர். ஏற்பாடுகளை, உதவி வேளாண்மை அலுவலர்கள் ரமேஷ்குமார், ஜோதிகணேசன், மணியன், ராஜேந்திரன், தொழில்நுட்ப அலுவலர் பன்னீர்செல்வம் செய்திருந்தனர். ஊராட்சி துணைத்தலைவர் மணியன் நன்றி கூறினார்.

## வறட்சி பாதித்த விவசாயிகளுக்கு உடனடி நிவாரணம்; திமுக வலியுறுத்தல்

அரூர்,: விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்று தர்மபுரி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் முல்லைவேந்தன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் சென்னை நீங்கலாக பிற மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக தமிழக அரசு

அறிவித்தது. இதையடுத்து வறட்சி பகுதிகளை பார்வையிட்டு நிவாரணம் வழங்கிட நிதியமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில் 5 அமைச்சர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. ஆனால் இது வரை வறட்சி பகுதிகளை பார்வையிட்டு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. விவசாயிகள் கடும் வறட்சி காரணமாகவும், அறிவிக்கப்படாத 20 மணி மின் வெட்டு காரணமாகவும் கிணற்றில் உள்ள கொஞ்சம் தண்ணீரையும் பயிர்களுக்கு பாய்ச்ச முடியாத நிலையில் கால்நடைகளுக்கும் தீவனமின்றி அடிமாட்டு விலைக்கு கால்நடைகளை விற்று வரும் அவல நிலை உள்ளது.

இந்நிலையில் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வறட்சியை பார்வையிட 12.4.13 அன்று அமைச்சர்கள் குழு வருகிறது என்பதை அறிந்த விவசாயிகள் நாள் முழுக்க காத்திருந்தனர். மாலை 6 மணியளவில் மாவட்ட எல்லைக்கு வந்து இரவு 7 மணி முதல் 7.30 மணிவரை ஏலகிரி, கொட்டுமாரணஅள்ளி ஆகிய இடங்களில் மின் விளக்கு வெளிச்சத்தில் வறட்சி பகுதிகளை பார்வையிட்டு சென்ற னர்.

இதேபோல், கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி, ஊத்தங்கரை பகுதியிலும் மின் விளக்கு வெளிச்சத்தில் வறட்சி பகுதிகளை பார்வையிட்டு சென்றனர். தங்களின் குறைகளை சொல்ல காத்திருந்த விவசாயிகள் அமைச்சர்களை சந்திக்காமலேயே வீடு திரும்பினர். அறிவிக்கப்படாத 20 மணி நேர மின்வெட்டால் தமிழ்நாட்டையே இருளில் மூழ்கடித்து விட்டு, இது போன்று இரவு நேரத்தில் வறட்சி பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு என்ற பெயரில் மக்களை ஏமாற்றாமல் பகல் நேரத்தில் வறட்சி பகுதிகளை பார்வையிட்டு விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிய வேண்டும் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## தேயிலைத்தூள் விலை ரூ.4 சரிவு



குன்னூர் : குன்னூர் அரசு கூட்டுறவு ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 16வது தேயிலை ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. மொத்தம் 4 லட்சத்து 21ஆயிரத்து 954 கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு வந்தது. இந்த ஏலத்தில்  வர்த்தகர்கள் குறைந்த அளவில் கலந்து கொண்டனர். இதனால் 60 சதவீத தேயிலைத்தூளே விற்பனையானது. அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.4 வரை விலை குறைந்தது.

இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.88 முதல் ரூ.95 வரையிலும், உயர்வகை கிலோவுக்கு ரூ.100 முதல் ரூ.105 வரையிலும் விலை கிடைத்தது. டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.90 முதல் ரூ.95 வரையிலும், உயர்வகை கிலோ ரூ.108 முதல் ரூ.112 வரையிலும் விலை கிடைத்தது.

## சர்க்கரை உற்பத்தி 2 சதவீதம் சரிவு



புதுடெல்லி: நடப்பாண்டில் சர்க்கரை உற்பத்தி 2 சதவீதம் குறைந்தது. நடப்பு சந்தை ஆண்டில்(செப்டம்பர்,அக்டோபர்), கடந்த 15ம் தேதி வரை 2.41 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகி உள்ளது. இது 2 சதவீதம் சரிவாகும். கடந்த ஆண்டில் இதே காலத்தில் 2.45 கோடி டன் உற்பத்தியாகி இருந்தது. கடந்த ஆண்டில் நாட்டில் மொத்தம் 169 சர்க்கரை ஆலைகள் இயங்கி வந்தன.

ஆனால், தற்போது 131 ஆலைகளை இயங்கி வருகின்றன. நடப்பாண்டில் அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 79 லட்சம் டன் சர்க்கரையும், உத்தரபிரதேசத்தில் 72 லட்சம் டன் சர்க்கரையும் உற்பத்தியாகியுள்ளன. கர்நாடகாவில் 33 லட்சம் டன்னும், தமிழகத்தில் 14 லட்சம் டன்னும், குஜராத்தில் 11 லட்சம் டன்னும், ஆந்திராவில் 90,000 டன்னும் உற்பத்தியாகியுள்ளன.

இன்றைய வேளாண் செய்திகள்

19.04.2013 A.M

**இன்று நடைபெறுவதாக இருந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் 22–ந் தேதி நடக்கிறது**

கஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் சித்ரசேனன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சீபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு நடைபெறுவதாக இருந்தது. பல்வேறு காரணங்களால் வருகிற 22ந் தேதி (திங்கட்கிழமை) மாலை 3 மணிக்கு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெள்ளூரில் நடந்த உழவர் பெருவிழாவில் 273 விவசாயிகளுக்கு வேளாண்மை கருவிகள் அதிகாரி வழங்கினார்

வந்தவாசி அருகே நடந்த உழவர் பெருவிழாவில் 273 விவசாயிகளுக்கு விவசாய பொருட்களை மாவட்ட இணை இயக் குனர் சக்கரவர்த்தி வழங்கி பேசினார்.

உழவர் பெருவிழா

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அருகே உள்ள தெள்ளூர் கிராமத்தில் வேளாண்மை துறையின் சார்பில் உழவர் பெருவிழா நடந்தது. விழாவிற்கு வந்தவாசி வேளாண்மை உதவி இயக்குனர் கே.ராஜசேகரன் தலைமை தாங்கினார்.

துணை வேளாண்மை அலுவலர் கணேசமுர்த்தி, கரும்பு அலுவலர் சரவணன், உதவி பொறியாளர் சங்கரன் ஆகியோர் முன்னிலை வகித் தனர். உதவி விதை அலுவலர் பார்த்திபன் வரவேற்று பேசினார்.

273 பேருக்கு இடுபொருட்கள்

விழாவில் கலந்து கொண்ட திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக் குனர் சக்கரவர்த்தி விவசாயி களுக்கு 1 பவர் டில்லர்,1 விசை தெளிப்பான், 1 கை தெளிப் பான், 50

பேருக்கு இடு பொருள், 110 நபர்களுக்கு விதை கிட்டுகள், 10 பேருக்கு மணிலா, 100 பேருக்கு நுண் ணுயிர் பாக்ஸ், 10 விவசாயி களுக்கு விவசாய கருவிகள் ஆகியவற்றை வழங்கி பேசினார்.

விழாவில் ஆத்மா திட்ட அலுவலர் பெருமாள், விதை சான்று அலுவலர் குமரன், வணிக துறை அலுவலர் ஆனந்தன், தோட்டக்கலை அலுவலர் குப்பன், ஊராட்சி மன்ற தலைவர் ராஜி உள்பட பலரும் கலந்து கொண் டனர்.

துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் 60 கிராமங்களில் உழவர் பெருவிழா அரங்கநாதன்

எம்.எல்.ஏ. தொடங்கிவைத்தார்

துரிஞ்சாபுரம் ஒன்றி யத்தில் உள்ள 60 கிரா மங்களில் உழவர் பெரு விழா நடைபெறு கிறது. இதனை ஏ.கே.அரங்க நாதன் எம்.எல்.ஏ., தேவனாம்பட்டு கிராமத்தில் தொடங்கி வைத்தார்.

உழவர் பெருவிழா

திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் உள்ள 60 வரு வாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடத்தப்படுகின் றன. முதலில் தேவனாம்பட்டு ஊராட்சியில் உழவர் பெரு விழா தொடக்க விழா நடை பெற்றது.

விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவர் ஜி.துரை தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் கோ.ரமணன் வரவேற்றார்.துரிஞ்சாபுரம் ஒன்றிய குழு தலைவர் ஏ.கோவிந்தராஜ் முன்னிலை வகித்தார்.

ஏ.கே.அரங்கநாதன் எம்.எல்.ஏ.

கீழ்பென்னாத்தூர் தொகுதி சடட்டமன்ற உறுப்பினர் ஏ.கே.அரங்கநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மானிய விலையில் உளுந்து வழங்கி பேசினார்.

விழாவில் உழவர் பெரு விழாவின் முக்கிய நோக்க மான இரண்டாம் பசுமை புரட்சி ஏற்படுத்துதல், விவ சாயிகள் உற்பத்தியை இரட்டிப்பு ஆக்குதல் மற்றும் விவசாயத்தில் திருந்திய நெல்சாகுபடி, சொட்டு நீர் பாசனம் பயன்படுத்த வேண் டும் என வலியுறுத்தப்பட் டது.

அதிகாரிகள் இல்லை

விழாவில் அரசு சார்பில் வழங்கும் மானியங்கள் விவசாயிகளுக்கு முழுமை யாக தெரிவிப்பது இல்லை. உழவர் பெருவிழாவில் 18 துறைகளில் ஒரு சில துறை சேர்ந்த அலுவலர்கள் மட்டும் தான் வந்து உள்ளனர். விழா வில் விவசாயிகளுக்கு தேவை யான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவில்லை. உழவர் பெருவிழாவில் விவசாயிகள் பயன் அடையும் வகையில் மாவட்ட கலெக்டர் நட வடிக்கை எடுக்க வேண்டும். என விவசாயிகள் தெரிவித் தனர்.

தங்க தேயிலை விருது போட்டியில் பங்கேற்ற தேயிலை தூள் ஏலம்

தங்க தேயிலை விருது போட்டியில் பங்கேற்ற தேயிலை தொழிற்சாலைகளின் தேயிலை தூள் சிறப்பு ஏலம் உபாசி தேயிலை ஏல மையத்தில் நடைபெற்றது.

தங்க தேயிலை விருது

தென்னிந்திய தேயிலைக்கு உலக அளவில் நல்ல விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தேயிலை வாரியமும், உபாசியும் இணைந்து தேயிலை தொழிற்சாலைகளுக்கு இடையே தங்க தேயிலை விருதை கடந்த 8 ஆண்டுகளாக நடத்தி வருகிறது.

இந்த போட்டியில் கலந்து கொண்ட தேயிலை தொழிற்சாலைகளின் தேயிலைதூள் அடங்கிய சிறப்பு ஏலம் ஆண்டு தோறும் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்தில் பங்கு பெறும் தேயிலை தூள் அதிக விலைக்கு ஏலம் செல்லும் என்பது குறிப்பிடத்தக்கது.9வது தங்க தேயிலை விருதுக்கான போட்டி கடந்த மாதம் குன்னூர் உபாசி அரங்கில் நடைபெற்றது. இதில், 125 தேயிலை தொழிற்சாலைகள் கலந்து கொண்டன. இதில் 23 தேயிலை தொழிற்சாலைகள் விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டன. இந்த நிலையில், தங்க தேயிலை விருது போட்டியில் வெற்றி பெற்ற தேயிலை தொழிற்சாலைகளுக்கு தேயிலை வாரிய தலைவர் பானு சான்றிதழ்களை வழங்கினார்.

இதனை தொடர்ந்து தங்க தேயிலை விருது போட்டியில் பங்கேற்ற தேயிலை தொழிற்சாலைகளின் தேயிலைதூள் சிறப்பு ஏலம் உபாசி தேயிலை ஏல மையத்தில் நடைபெற்றது. இதனை தேயிலை வாரிய தலைவர் பானு தொடங்கி வைத்தார்.

சராசரி விலை

இந்த ஏலத்திற்கு மொத்தம் 71 ஆயிரத்து 388 கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 45 ஆயிரத்து 283 கிலோ இலை ரகமாகவும், 26 ஆயிரத்து 55 கிலோ தூள் (டஸ்ட்) ரகமாகவும் இருந்தது. இலை ரக தேயிலை தூளில் 27 ஆயிரத்து 123 கிலோ விற்பனையானது. தூள் ரகத்தில் 15 ஆயிரத்து 566 கிலோ விற்பனையானது.

இலை ரகத்தின் சாதாரண வகை 164 ரூபாய் 35 பைசாகவும், தூள் ரகம் 162 ரூபாய் 46 பைசா என்றும், உயர்ந்த பட்ச விலையாக இலை ரகத்திற்கு ஆயிரத்து 750 ரூபாயாகவும், தூள் ரகத்தில் 504 ரூபாய் என்று ஏலம் போனது. இந்த தகவலை தங்க தேயிலை விருதுக்கான அமைப்பு குழு ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

விவசாய தொழில் நுட்பங்களை அறிந்து பயிர் செய்தால் அதிக வருவாய் ஈட்டலாம்

கலெக்டர் நடராசன் பேச்சு

விவசாய தொழில் நுட் பங்களை அறிந்து பயிர் செய்தால் அதிக வருவாய் ஈட்டலாம் என்று கலெக்டர் நடராசன் பேசினார்.

உழவர் பெருவிழா

மன்னார்குடி தாலுகா மூவாநல்லூரில் உழவர் பெருவிழா நடைபெற்றது. விழாவிற்கு கலெக்டர் நடராசன் தலைமை தாங்கி பேசியதாவது:

முதல் அமைச்சர் ஜெயல லிதா ஆணையின்படி, தமிழ கத்தில் 2ம் பசுமை புரட்சியை ஏற்படுத்திட திருவாரூர் மாவட்டத்தின் 573 வருவாய் கிராமங்களிலும் உழவர் பெரு விழா நடத்தப்பட்டு வருகிறது. விவசாயத்தில் 2 மடங்கு உற்பத்தி, 3 மடங்கு வருவாய் ஈட்டிடும் வகையில் திருவாரூர் மாவட்டத்தில் வேளாண் உற்பத்தியை பெருக்கிடவும், அதிக வருவாய் ஈட்டுவதற்கான வழிமுறைகளை விவசாயிகள் அறிந்திடவும் வேளாண்மை துறை மூலம் உழவர் பெருவிழா நடத்தப்படுகிறது.

உங்கள் அனைவருக்கும் இவ்விழா மூலம் நவீன யுத்தி கள் கற்றுத் தரப்படுகிறது. மாவட்டத்தின் மண்வளம், காலநிலை, நீர் ஆதாரம் இவைகளின் அடிப்படையில் எப்போது என்ன பயிர் செய் வது, மாற்று விவசாயத்திற்கான வழி முறைகள் அனைத்தும் இதன் மூலம் தெரிந்து கொள் ளலாம்.

தற்போது நன்னிலம் வட்ட விவசாயிகள் முசுக்கொட்டை செடி பயிரிட்டு பட்டுப்புழு வளர்த்து வருவாய் ஈட்ட உள்ளார்கள்.

நலத்திட்ட உதவிகள்

தமிழ்நாட்டில் மற்ற பகுதிக ளில் இல்லாத வளமான பூமி யாக திருவாரூர் மாவட்டம் திகழ்கிறது. இதனை பயன் படுத்தி விவசாய தொழில்நுட் பங்களை அறிந்து பயிர் செய்தால் அதிக வருவாய் ஈட்டலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள், இடு பொருட்கள், மரக்கன்றுகள் போன்ற நலத்திட்ட உதவி களை கலெக்டர் நடராசன் வழங்கினார்.

விழாவில் வேளாண்மை துணை இயக்குநர் மயில் வாகனன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்ப திவாளர் ரவிச்சந்தி ரன், நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சோழன், மூவாநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் சங்கீதா ஜெயகாந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக வேளாண்மை உதவி இயக்குநர் உத்திராபதி வரவேற்றார். முடிவாக வேளாண்மை அலுவலர் விஜயகுமார் நன்றி கூறினார்.

திருச்சி மாவட்டத்தில் வேளாண் துறை சார்பில் உழவர் பெருவிழா விவசாயிகளுக்கு இடுபொருட்களை இந்திராகாந்தி எம்.எல்.ஏ. வழங்கினார்

திருச்சி மாவட்டத்தில் வேளாண் துறை சார்பில் உழவர் பெருவிழா நடைபெற்றது. விவசாயிகளுக்கு இடுபொருட்களை இந்திராகாந்தி எம்.எல்.ஏ. வழங்கினார்.

தா.பேட்டை

தா.பேட்டை வட்டார வேளாண் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் கரிகாலி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 2013–2014ம் ஆண்டிற்கான உழவர் பெருவிழா நடைபெற்றது. தா.பேட்டை ஒன்றிய குழு தலைவர் எம்.செல்வராஜ் தலைமை வகித்து உழவர் பெருவிழாவினை தொடங்கி வைத்தார். ஒன்றிய கவுன்சிலர் ஜெயம், ஊராட்சி தலைவர்கள் நேரு, வான்மதி சக்திவேல், ரங்கசாமி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ராமஜெயம் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

தா.பேட்டை வேளாண் உதவி இயக்குநர் செல்வம், தோட்டக்கலை உதவி இயக்குநர் கணேசன், வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் ஜெயபாலகண்ணன், கால்நடை உதவி மருத்துவர்கள் சிவானந்தன், பெரியசாமி, பால்வளத்துறை செல்வம் ஆகியோர் விளக்க உரை ஆற்றினார்கள். வேளாண் உதவி அலுவலர்கள் செந்தில்குமார், முருகானந்தம் ஆகியோர் செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். முடிவில் உதவி வேளாண் அலுவலர் மனோகரன் நன்றி கூறினார். விழாவில் விவசாயிகளுக்கு உழவர் பெருதினவிழா டிசர்ட் பனியனும், பயிற்சி கையேடுகளும் வழங்கப்பட்டன..

உப்பிலியபுரம்

உப்பிலியபுரம் அடுத்த தளுகை ஊராட்சியில் உழவர் பெருவிழா நடைபெற்றது. வேளாண் உதவி இயக்குநர் கலைச்செல்வி தலைமை வகித்தார். ஒன்றிய குழு தலைவர் லலிதா செல்லமுத்து, ஒன்றிய செயலாளர் அழகாபுரி செல்வராஜ், மாவட்ட கவுன்சிலர் ஆனந்தி கணேசன், ஒன்றிய இலக்கிய அணி இணை செயலாளர் கருப்பம்பட்டி மோகன்தாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தளுகை ஊராட்சி தலைவர் பெரியசாமி வரவேற்றார்.

இதில் இந்திராகாந்தி எம்.எல்.ஏ கலந்து கொண்டு உழவர் பெருவிழாவை தொடங்கி வைத்தார். விழாவில் ஒன்றிய கவுன்சிலர்கள் தன்னேரி, துரைசாமி, பேரூர் செயலாளர்கள் ராஜாங்கம், ராஜேந்திரன், எம்.ஜி.ஆர். மன்ற ஒன்றிய துணை செயலாளர் ராதாகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் வேளாண் அலுவலர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

துறையூர்

துறையூர் வேளாண் கோட்டத்தில் பொன்னுசங்கம்பட்டி ஊராட்சியில் உழவர் பெருவிழாவும் விவசாயிகளுக்கு செயல் முறை விளக்கமும், இடு பொருள் வழங்கும் விழாவும் நடைபெற்றது.

ஊராட்சித்தலைவர் சரசுபழனியாண்டி தலைமை தாங்கினார். ஒன்றியக்குழு துணைத்தலைவர் பாலசுப்ரமணியன் முன்னிலை வகித்தார். வேளாண் உதவி இயக்குநர் சாந்தி வரவேற்றார். இந்திராகாந்தி எம்.எல்.ஏ விவசாயிகளுக்கு இடு பொருட்கள் வழங்கினார்.

அதில் தோட்டகலை துறை அலுவலர் முருகன், கால்நடை உதவி மருத்துவர் சுபாஷ், வேளாண் பொறியியல் துறை உதவி என்ஜினீயர் செந்தில்குமார், பட்டு வளர்ச்சித்துறை அலுவலர் மாரியப்பன், வேளாண் வணிகத்துறை வேளாண் அலுவலர் மனோகரன், விதை சான்றளிப்பு துறை வேளாண் அலுவலர் பிரபாகரன், கூட்டுறவு துறை தனி அலுவலர் ரவிச்சந்திரன், கரும்பு அலுவலர் குப்புசாமி, வேளாண் அலுவலர் பிரகாஷ் ஆகியோர் செயல்முறை விளக்கம் அளித்தார்கள்.

நிகழ்ச்சியில் ஒன்றிய கவுன்சிலர் தனம் ஜெகநாதன், உப்பிலியபுரம் ஒன்றிய முன்னாள் துணை செயலாளர் புதுப்பட்டி தர்மராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை. முடிவில் வேளாண் அலுவலர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

பாண்டிபத்திரத்தில் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் எம்.எல்.ஏ. வழங்கினார்

பாண்டிபத்திரத்தில் நடந்த உழவர் திருவிழா வில் விவசாயிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ராஜநாயகம் எம்.எல்.ஏ. வழங்கினார்.

உழவர் திருவிழா

ஆவுடையார்கோவில் அருகே பாண்டிபத்திரத்தில் உழவர் திருவிழா நடந்தது. விழாவுக்கு ஆவுடையார் கோவில் வேளாண்மைத்துறை அட்மா திட்ட தலைவர் கூத்தையா தலைமை தாங்கி னார். பாண்டிபத்திரம் ஊராட்சி மன்ற தலைவர் ஆத்ம நாதன் வரவேற்று பேசினார். விழாவில் அறந்தாங்கி எம்.எல்.ஏ. ராஜநாயகம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவி களை வழங்கி பேசினார்.

அப்போது அவர் கூறிய தாவது;

தமிழக முதல்அமைச்சர் விவசாயத்துறைக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்து விவசாயிகள் நல்ல முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் மக்களுக்கு சேவை செய்து வருகிறார். மேலும் 31 மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அறி வித்து, காவிரி நீர் பாயாத விவசாயிகளுக்கும் கூடிய விரைவில் நிவாரணம் வழங்க உள்ளார்.

மண் பரிசோதனை

வேளாண்மைத்துறை அதிகாரிகள் மக்களுக்கு சேவை செய்ய உங்களை நாடி வந்து, உங்களுக்கு வேண்டிய உதவிகளை செய்ய உள்ளனர். விவசாயிகள் வயல்களுக்கு உரமிடும்போது மண் பரி சோதனை செய்து பயிர்களுக்கு தேவையான உரங்களை போட்டு, விவசாயத்தின் மூலம் அதிக மகசூல் பெற்று அதிக அளவில் வருமானம் பெற்று பயனடைய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசி னார்.

கலந்து கொண்டவர்கள்

விழாவில் கரூர் ஒன்றிய கவுன்சிலர் செல்லக்கண்ணு, மாவட்ட கவுன்சிலர் பாமா கருப்பையா, ஆவுடையார் கோவில் வேளாண்மைத் துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) ராதாகிருஷ்ணன், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு வீரமுத்து, வேளாண்மை பொறி யியல்துறை இளநிலை பொறியாளர் நெடுங்கிள்ளி, உதவி தோட்டக்கலை துறை அலுவலர் திருசங்கு, உதவி வேளாண்மை அலுவலர் பிரபாகரன், கால்நடை பாராமரிப்புத்துறை டாக்டர் முத்துதுரை, உதவி விதை அலுவலர் நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டு, வழங்கப்படும் திட்டங்கள் பற்றி பேசினார்கள்.

அறுசுவை உணவு

விழாவிற்கான ஏற்பாடு களை வேளாண்மை துறை அலுவலர்கள் முல்லை, ராமையா, சரவணன், மூர்த்தி, நாகராஜன், துரைராஜ் ஆகியோர் செய்திருந்தனர். விழாவில் ஒன்றிய பேரவை துணைத்தவைர் ராசு மற்றும் ஊராட்சி மன்ற துணை தலைவர் மூகாம் பிகை கார்த்திகேயன் மற் றும் ஊராட்சி மன்ற உறுப் பினர்கள், உழவர் மன்ற அமைப்பாளர் தங்கராசு மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் உதவி வோளண்மை அலுவலர் கிஷோர்குமார் நன்றி கூறினார். அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

வேப்பந்தட்டையில் உழவர் பெருவிழா; விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள்

வேப்பந்தட்டை பகுதி யில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் விவசாயி களுக்கு வேளாண் கருவிகள் மானிய விலை யில் வழங்கப் பட்டது.

உழவர் பெருவிழா

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலுக்கா பகுதியில் சித்திரை மாதம் 1ந் தேதியிலிருந்து உழவர் பெருவிழா ஒவ்வொரு கிராமங் களிலும் நடைபெற்று வருகிறது. அன்னமங்கலத்தில் நடைபெற்ற விழாவிற்கு ஒன்றிய குழுத் தலைவர் ஜெயலெட்சுமிகனகராஜ் தலைமை தாங்கி விழாவைத் தொடங்கி வைத்தார்.

ஊராட்சி மன்றத் தலைவர் குதரத்துல்லா, வேளாண்மை துணை இயக்குனர் பன்னீர் செல்வம், வேளாண்மை உதவி இயக்குனர் கீதா,வேளாண்மை அலுவலர் பிரேமா மற்றும் பலர் முன்னிலை வகித்தார் கள்.

மானிய விலையில்

விழாவில் தோட்டக் கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் விற்பனைத்துறை, கால்நடைத் துறை, பட்டு வளர்ப்புத்துறை மற்றும் வேளாண்மை சார்ந்த அனைத்து துறைகளின் சார்பில் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டு தங்களது துறை சார்ந்த செயல் திட்டங்கள் பற்றி விளக்கி கூறினார்கள். மேலும் விழாவில் மானிய விலையில் விவசாயிகளுக்கு பவர் ட்ரில்லர் மற்றும் வேளாண் கருவிகளை ஒன்றியக்குழுத் தலைவர் ஜெயலெட்சுமி கனகராஜ் வழங்கினார்.

இதில் திரளான விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். முடிவில் வேளாண்மை அலுவலர் பெரியசாமி நன்றி கூறினார்.

## இரூரில் உழவர் பெருவிழா

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா இரூர் கிராமத் தில் வேளாண்மைத்துறை சார்பில் உழவர் பெருவிழா நடை பெற்றது. விழாவிற்கு இரூர் ஊராட்சி மன்றத் தலைவர் ஸ்டாலின் தலைமை தாங்கினார். ஆலத்தூர் ஒன்றியக்குழுத் தலைவர் வெண்ணிலா, அ.தி.மு.க ஒன்றியச் செயலாளர் கர்ணன், ஒன்றியக்குழு துணைத் தலைவர் சாந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் தமிழ்செல்வன், எம்.எல்.ஏ கலந்து கொண்டு உழவர் பெருவிழாவை முன்னிட்டு விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி தமிழக அரசின் திட்டங்கள் குறித்து விளக்கி கூறினார். பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம் வேளாண்மை திட்டங்கள் குறித்து எடுத்து கூறினார்.

வேளாண்மை துணை இயக்குனர் சுப்ரமணியன், ரோவர் வேளாண்மை நிறுவன உதவி பேராசிரியர் திவ்யா, கால்நடை உதவி மருத்துவர் செந்தில்குமார், வேளாண் வணிகத்துறை உதவி வேளாண்மை அலுவலர் பழனிமுத்து, தோட்டக்கலைத் துறை உதவி வேளாண்மை அலுவலர்கள் மனோகரன், வீரபாண்டியன், கோபி, வேளாண்மைத்துறை உதவி அலு வலர்கள் மணிகண்டன், ராஜூ, கலியபெருமாள், புதுவாழ்வுத் திட்ட சந்திரமோகன், இரூர் ஊராட்சி துணைத் தலைவர் லலிதா, அட்மா திட்ட தொழில்நுட்ப வல்லுனர்கள் வீரமணி, கண்ணன், குமரேசன் உள்ளிட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். ஆலத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிச்சாமி வரவேற்றார். வேளாண்மை அலு வலர் மாயவேல் நன்றி கூறினார். மண்மாதிரி எடுத்தல் குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

## மரவாபாளையத்தில் உழவர் பெருவிழா

மரவாபாளையத்தில் உழவர் பெரு விழா நடந்தது.

உழவர் பெரு விழா

தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா சட்ட பேரவையில் அறிவித்து உள்ளபடி 2வது பசுமை புரட்சி ஏற்படுத்துவதற்காக பல்நோக்கு திட்டங்களை செயல்படுத்திட சித்திரை முதல் நாள்

(14ந்தேதி) முதல் கரூர் மாவட்டத்தில் உழவர் பெரு விழா நடைபெற்று வருகிறது. இந்த விழா அடுத்த மாதம் 15ந்தேதி வரை நடக்கிறது.

அதன்படி கரூர் மாவட்டம் நொய்யல் அருகே உள்ள மரவாபாளையத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் வேளாண்மை துறை மற்றும் சகோதரத்துறை சார்பில் உழவர் பெருவிழா நடைபெற்றது.

விழாவுக்கு வேட்டமங்கலம் ஊராட்சி தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். துணை தலைவர் சுப்பிரமணியன், கிராம நிர்வாக அலுவலர் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குனர் லட்சுமணசாமி வரவேற்று பேசினார்.

தொழில் நுட்ப கருத்துரை

ஒன்றிய கவுன்சிலர் முனு சாமி தொழில் நுட்ப கருத்துரை வழங்கினார். வேளாண்மை துறை திட்டங்கள் குறித்து வேளாண்மை துறை இயக்குனர் சுப்பிரமணியன், இணை இயக்குனர் தெய்வேந்திரன் ஆகியோர் விளக்க உரையாற்றினர். மண் மாதிரியின் முக்கியத்துவம், நுண்ணுூட்டங்களின் முக்கியத்துவம் குறித்து மண் ஆய்வு கூட வேளாண்மை அலுவலர் ஜெயபாரதி எடுத்துரைத்தார்.

தோட்டக்கலை துறை திட்டங்கள் குறித்து தோட்டக் கலை உதவி இயக்குனர் வளர்மதி எடுத்து கூறினார். வேளாண் விற்பனை மற்றும் திட்டங்கள் குறித்து வேளாண் வணிகத்துறை அலுவலர் டேவிட்ராஜ் விளக்கினார்.

செம்மை கரும்பு சாகுபடி குறித்து விவசாய பயிற்சி அலுவலர் சந்திரகலா விளக்கி னார். வேளாண்மை பொறியி யல் துறை திட்டங்கள் குறித்து இளநிலை பொறியாளர் நாகராஜன் விளக்கினார்.

பட்டு வளர்ச்சி

கால்நடைகள் குறித்து கால்நடை மருத்துவர் தமிழ ரசன் விளக்கினார். பட்டு வளர்ச்சி பற்றி முதன்மை மண்டல மேலாளர் சுப்பிர மணியன் மற்றும் ஆய்வாளர் ராஜன் ஆகியோர் எடுத்து கூறினர்.

விவசாய பயிர்களுக்கு உதவி வேளாண்மை அலுவலரும், மண் பரிசோதகருமான சக்தி வேல் செயல்விளக்கம் செய்து காண்பித்தார். இடு பொருட்கள் வினியோகம் செய்தல் குறித்து வேளாண்மை அலுவலர் டேவிட்ராஜ் விளக் கினார்.

விதை கிழங்கு நேர்த்தி

கரும்புக்கு ஒட்டுன்னி விடுதல், விவசாய பயிற்சி மற்றும் விதை கிழங்கு நேர்த்தி குறித்து விவசாய பயிற்சி அலுவலர் சந்திரகலா விளக்கி னார். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில்

விவசாயி களின் பங்கு குறித்து வங்கியின் செயலாளர் கிட்டான் விளக்கினார். தோட்டக்கலை துறையின் பணிகள் குறித்து தோட்டக் கலை உதவி அலுவலர் இலக்குவன் விளக்கி னார்.

கலந்து கொண்டவர்கள்

விழாவில் நொய்யல், மரவாப்பாளையம், சேமங்கி மற்றும் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

முடிவில் வேளாண்மை உதவி அலுவலர் சக்திவேல் நன்றி கூறினார்.

## ஆண்டிப்பட்டி, தேவதானப்பட்டியில் சூறைக்காற்றில் வாழை மரங்கள் சாய்ந்தன

ஆண்டிப்பட்டி, தேவ தானப்பட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீசிய சூறைக்காற்றில் வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து நாசமாகின.

சூறைக்காற்று

தேனி மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. அதே நேரத்தில் மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளில் ஆங்காங்கே பலத்த சூறாவளிக்காற்றுடன் கோடை மழை பெய்கிறது. கடந்த சில தினங்களாக வெயிலின் தாக்கம் ஒருபுறம் இருக்க ஒரு சில பகுதிகளில் மழை கொட்டி தீர்த்தது.

குறிப்பாக நேற்று முன்தினம் தேவதானப்பட்டி அருகே உள்ள குள்ளப்புரம், மருகால் பட்டி, ஏ.வாடிப்பட்டி ஆகிய பகுதிகளில் சூறாவளிக் காற்று டன் பலத்த மழை பெய்தது. இதில் அந்த பகுதிகளில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் சாகு படி செய்யப்பட்டிருந்த வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து சேதம் அடைந் துள் ளன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

ஆண்டிப்பட்டி

ஆண்டிப்பட்டி அருகே போடிதாசன் பட்டி பகுதியில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை நேற்று முன்தினம் பெய்தது. இதனால் அந்த பகுதியில் பயிரிடப்பட்டு இருந்த வாழை மரங்கள் மற்றும் முருங்கை மரங்கள் சேதமடைந்தது. போடிதாசன் பட்டியை சேர்ந்த வள்ளியம் மாள் என்பவருக்கு சொந்த மான வாழைத்தோப்பில் ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து விழுந்தது.

தனக்கு ஏற்பட்ட வாழை சாகுபடி இழப்பிற்கு தமிழக அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று வள்ளியம் மாள் ஆண்டிப்பட்டி தாசில் தாரிடம் மனு கொடுத்தார். இதனையடுத்து வருவாய்த் துறை அதிகாரிகள் பயிர் சேதங்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மண்ணின் தன்மையை ஆய்வு செய்து பயிர் செய்தால் அதிக லாபம் பெறலாம் கலெக்டர் ராஜாராமன் பேச்சு

விவசாய நிலப்பகுதிகளில் உள்ள மண்ணின் தன்மையை ஆய்வு செய்து பயிரிட் டால் அதிக லாபம் பெற முடியும் என்று கலெக்டர் ராஜாராமன் கூறினார்.

உழவர் பெருவிழா

சிவகங்கை ஒன்றியம், கண் டாங்கிப்பட்டி, குமாரப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின் மூலம் உழவர் பெருவிழா கலெக்டர் ராஜாராமன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கலெக்டர் பேசியதாவது:

வேளாண்மைத்துறை, வேளாண் பொறியியல்துறை, தோட்டக்கலைத்துறை, கால் நடை பராமரிப்புத்துறை, மீன் வளர்ப்புத்துறை, ஆவின் ஆகிய துறைகள் ஒருங் கிணைந்து மாவட்டத்தில் உள்ள 521 வருவாய் கிராமங் களுக்கும் ஒருமாத காலத்திற் குள் முகாம் நடத்தி உழவர் களுக்கு பயிற்சிகளும் மற்றும் நலத்திட்டங்களும் வழங்க திட்டமிட்டு தற்பொழுது முகாம் நடத்தப்பட்டுவருகின் றன.

தங்கள் பகுதிகளில் ந டபெறும் உழவர் பெருவிழா நிகழ்ச்சியில்விவசாயிகள் முழுஅளவில் கலந்து கொண்டு துறைகள் மூலம் வழங்கும் பயிற்சி களை நன்கு தெரிந்து கொள்வதுடன் தங்கள் பகுதி களின் விவசாயநிலப்பகுதி களில் உள்ள மண் தன்மையை அலுவலர்களிடம் ஆய்வு செய்து அதற்கேற்ப பயிர் வகை களை பயிரிட வேண்டும். அப்பொழுதுதான் திட்ட மிட்ட படி அதிக லாபம் பெறமுடியும்.

நவீன விவசாய கருவிகள்

கிராமப் பகுதியில் உள்ள பெண்கள் ஒருங்கிணைந்த பண்ணைய முறையில் விவ சாயம் மற்றும்தொழில் செய்வ தற்காக பண்ணைய மகளிர் குழு அமைக்க வேண்டும்.அப்போதுதான் அரசு வழங் கும் பயிற்சி மற்றும் வங்கிக் கடன் போன்றவற்றை எளிதில் பெறுவதுடன் அதன் மூலம் கடன்களையும் எளிய முறை யில் திருப்பிசெலுத்த முடியும். மேலும் வேளாண்மை பொறி யி யல் துறையின் மூலம் விவ சாயிகளுக்கு மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தின் கீழ நவீனவகை கருவிகள் வழங்கப் பட்டு வருகின்றன.இவைகளை விவசாயிகள் பெற்று உற்பத் தித் திறனை அதிகரிக்க வேண் டும்.

மேலும் கிராமப் பகுதிகளில் கோழி, கறவை மாடு, பட்டு வளர்ப்பு குறித்து ஆகிய பயிற்சிகள் அரசின் மூலம்வழங் கப்பட்டு வருகிறது. இதில் ஆண்கள் மட்டுமின்றி பெண் களும்ஆர்வமுடன் கலந்து கொண்டு பயிற்சி பெற்று தொழில் மையங்களை உரு வாக்க வேண்டும். விவ சாயி கள் திட்டங்களை முழுமையாக பெற்று தங்களின் பொருளா தாரத்தை உயர்த்திக் கொள்வ துடன், மாவட்டத் திற்கும் பெருமை தேடித்தர வேண் டும்.

இவ்வாறு அவர் கூறினார்

நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் தலைவர் சிவதேவ் குமார், சிவகங்கை யூனியன் தலைவர் பாஸ்கரன், துணைத் தலைவர்சந்திரன், கண்டாங் கிப் பட்டி ஊராட்சி மன்றத் தலைவர்மஞ்சுளா பாலசந்தர், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கதிரிமங்கலம் ஊராட்சியில் உழவர் பெருவிழா

திருப்பத்தூர் ஒன்றியம் கதிரிமங்கலம் ஊராட்சியில் உழவர் பெருவிழா நடந்தது. ஊராட்சிமன்ற தலைவர் டி.வி.ஜி.மோகன்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட கவுன்சிலர் எஸ்.குமார், ஒன்றிய குழு உறுப்பினர் எம்.திருமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணைத்தலைவர் வி.வடிவேல் வரவேற்றார்.

விழாவில் வேளாண் சார்புடைய கண்காட்சிகள், செயல் விளக்கங்கள், இடுபொருட்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. வேளாண்மை துறை குறித்து பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவலர்கள் விளக்கம் அளித்தனர். விவசாயிகளுக்கு அடையாள அட்டை, மானிய விலையில் விதை, உரம் அளிக்கப்பட்டது. அதன்பிறகு அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் வார்டு உறுப்பினர்கள் பூபாலன், முருகன், ராஜேஷ், செண்பகவள்ளி, சிவக்குமார், விஜயதிலகம், சக்திவேல், ஊராட்சி செயலாளர் என்.வெங்கடாசலபதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.